# அருவியூர் நகரத்தார் குரல்



ஆண்டு 25 - 151
சார்வாரி - மார்கழி

திங்கள் இரண்டுக்கு ஒன்று
கல்வி பண்பாடு வளர்ச்சி இதழ்

ஜனவரி 2021


## கல்விக்காவலர்

37 வது

HAPPY NEW YEAR 2021



**திரு. சி. வெள்ளச்சாமி செட்டியார் – திருமதி சாந்தி**

பூர்வீகம்: சிறுகுடி. குடிப்பட்டம்: பொன்னமராவதி பூண்டிலூருடையார்.

பெருமைக்குரிய பெயர் சொல்லும் நன்மக்கள்:

வெ. வினோத் குமார் B.B.M., – ஞான சௌந்தர்யா B.Sc., குனியமுத்தூர், கோவை.

வெ. விவேக்குமார் B.Com., M.B.A., – காயத்ரீ B.E.,

குழனியும் இனிய பேரன் பேத்திகள்: V. ரிஷிகா ஸ்ரீ (பேத்தி), V. ரித்திக் ஸ்ரீ (பேரன்)


வெளியீடு

அருவியூர் வடக்குவளவு நகரத்தார்

கல்வி வளர்ச்சிக் கழகம் (பதிவு)

பிரான்மலை



Guruji.S.RAJAKUMAR
Business Consultants
Devotional Advisor
+91 944 348 0007

#7, LIGHT HOUSE COMPLEX,
FOUR ROADS, SALEM - 636 009.
CELL : 98427 10545, 93677 10545

3A SANNITHANAM, P54 'VISAKA',
6TH AVENUE, ANNA NAGAR,
CHENNAI - 600 040.
Cell : 93600 10545

WOODLAND CIRCLE,
5, RAJA RAM MOHAN ROY ROAD,
RICHMOND CIRCLE,
BENGALURU - 560 025.
CELL : 90350 10545

MAHILVITHU MAHIL®
MAHA SANNITHANAM

gurusaranam5@gmail.com www.mahilvithumahil.com Google Play: Mahilvithu Mahil

RK.KANE MOZHI

My DRESS CODE™
Just different. More unique..

SILK SAREES ❖ FANCY SAREES ❖ CHUDIDHAR ❖ TOPS

mydresscodeslm@gmail.com /mydresscodeslm

My DESIGN STUDIO™
boutique style stitching

"We undertaking All type of Stitching Work"

❖ Aari Work ❖ Designer Blouse ❖ Customized Stitching

#221, SURYA NIVASS, MAIN ROAD,
OPP. JAIN TEMPLE,
SHANKAR NAGAR, SALEM - 636 007.

Mob. : 98428 10545
83003 10545

உ
நமது சமூகத்தின் கல்வி வளர்ச்சியே எமது தலையாய குறிக்கோள்

உதவுவோம்! பண்படுத்துவோம்! பாராட்டுவோம்!

**பட்டம் பெற்றுத் தொழிலிற் சிறப்போம்!**

# அருவியூர் நகரத்தார் குரல்



அலைபேசி : 63744 59670

**ஆண்டு 25**
**வெளியீடு 151**

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து - குறள் 398

**ஜனவரி 2021**
**சார்வரி-மார்கழி**

**கழக நிர்வாகிகள்**

செ. ஆசை அலங்காரம் - 96294 67287
சுப. செல்வம் - 94444 68900
சே. சந்திரசேகர் - 98404 39115

**நிர்வாகக் குழு**

**இணைத் தலைவர்கள்**
ஏ.பி. ஸேதுராமன் - 98422 89705
சொ. இராமனாதன் - 97155 100 0179

**துணைத் தலைவர்**
பொன். சிவஞானம் - 63811 55496

**உறுப்பினர்கள்**
செந்தில் செல்வம் - 99941 61123
பெ. சிவன்ஜோதி - 99446 90206
சி. அருணாசலம் - 98421 16732
மா. சாமிநாதன் - 98430 84455

**சிறப்பு அழைப்பாளர்**
சுப. செல்வம் - குரல் ஆசிரியர்

**உள் தணிக்கையாளர் :** சு. நித்யலங்காரம் ACA
**Website Manager :** நா. ஜெயராமன் B.Com., FCA
**Website :** avnkalvi.blogspot.com

**குரல் ஆண்டு சந்தா : ரூ. 100/-**
**குரல் ஆயுள் சந்தா : ரூ. 1500/-**

**குரல் நிறுவிய ஆசிரியர்**
திரு.சொ. வைத்திலிங்கம்
தொடக்கம் : 1997

**கௌரவ ஆசிரியர்**
திரு. ம. மாணிக்கம் செட்டியார்
தலைவர் அவந பொதுநலச்சங்கம்

**சிறப்பு ஆலோசகர்**
புலவர் திரு. மலை. சோமசுந்தரம், பி.லிட்.

**ஆசிரியர் குழு**
திரு. சுப. செல்வம், சென்னை
திரு. மா. சேதுராமன் - மணப்பாறை
மற்றும் கழக நிர்வாகிகள்

**குரல் பதிப்பாசிரியர்**
திரு. சுப. செல்வம் - 94444 68900

கடிதம், செய்திகள், படைப்புகள் இவற்றை
அனுப்ப வேண்டிய முகவரி :
அருவியூர் நகரத்தார் குரல்,
அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்,
3, முதல் குறுக்குத் தெரு,
அழகப்பா காம்ப்ளெக்ஸ் பின்புறம்,
பொன்னமராவதி,
புதுக்கோட்டை - 622 407.
avnkalvi@gmail.com
suryaprint1998@gmail.com

---

## இனிய தை திருநாள் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# 2021

## பொங்கல் வாழ்த்து



பொங்க வேண்டும் வாழ்வில் இன்பம்!
அகல வேண்டும் எங்கள் துன்பம்!
பெருக வேண்டும் மனதில் மகிழ்வு!
சிறக்க வேண்டும் யாவர்க்கும் நல்வாழ்வு!

**- குரல் ஆசிரியர் குழு**

# உள்ளடக்கம்



| வ. எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தலைவர் பக்கம் | 5 |
| 2. | பொதுநலச் சங்க செயற்குழு நிகழ்வுகள் | 8 |
| 3. | பொதுநலச் சங்க தேர்தல் அறிவிப்பு | 9 |
| 4. | க.வ.க. நிர்வாகக் குழு நிகழ்வுகள் | 10 |
| 5. | க.வ.க. செயற்குழு நிகழ்வுகள் | 12 |
| 6. | க.வ.க. தேர்தல் அறிவிப்பு | 13 |
| 7. | கழக அறிவிப்புகள் | 14 |
| 8. | இராமேஸ்வரம் நகர விடுதி திறப்பு | 15 |
| 9. | தமிழின் சுவை | 16 |
| 10. | 37-வது கல்விக்காவலர் வரலாறு | 17 |
| 11. | திருவாதிரைப் பெருவிழா | 21 |
| 12. | சிவ சிவ என்று கூறுங்கள் | 23 |
| 13. | உணவுக்கு மட்டுமா உப்பு? | 24 |
| 14. | மதுரை அவந சங்க புதிய நிர்வாகிகள் | 26 |
| 15. | திருத்தொண்டர் பெருமை | 27 |
| 16. | நடுப்பக்கச் செய்தி - திருமண வாழ்த்துக்கள் | 37 |
| 17. | அதிசய கோயில்கள்-திருமீயச்சூர் | 39 |
| 18. | மாபெரும் நன்கொடையாளர்கள் | 44 |
| 19. | புதிய கல்விக்காவலர்கள் | 45 |
| 20. | 'http', 'https' வேறுபாடு | 46 |
| 21. | கல்விக்காவலர்கள் | 48 |
| 22. | வாசகர் குரல் | 50 |
| 23. | மங்கைநாயகர் திருமண தகவல் மையம் | 52 |
| 24. | மத்திய மாநில அரசு ஆட்சிப்பணிகள் | 53 |
| 25. | சிவபாதம் சேர்ந்தார்கள் | 57 |
| 26. | குறுக்கெழுத்துப் போட்டி | 60 |
| 27. | வாழ்க்கை ஒரு அற்புதப் பரிசு | 62 |
| 28. | வீட்டில் விளக்கேற்ற உகந்த நேரம் | 64 |
| 29. | தெரியாமலா சொன்னார்கள் - முன்னோர்கள் | 68 |
| 30. | நில அளவை | 70 |
| 31. | இதமான வாழ்விற்கு | 72 |

உ

**உலகமே உங்களை மறந்தாலும் நாங்கள் என்றும் உங்களை நினைவு கூர்வோம்**

ராஜராஜ சோழன் கட்டிய தஞ்சை பெரிய கோவிலைப் போன்று!
பல்லவர்கள் அமைத்த மகாபலிபுரம் கற்சிற்பங்களைப் போன்று!
என்றும் உங்கள் புகழ் நிலைத்திருக்கும்!

**நீங்கள் செய்ய வேண்டியது**

**நமது மாணவர்களின் கல்விக்காக கல்வி வளர்ச்சிக் கழகத்திற்கு**

**ரூ. 1,00,000**

**வழங்கி கல்விக்காவலர் திட்டத்தில் இணைந்திடுவீர்!**

- தலைவர், கல்வி வளர்ச்சிக் கழகம்

# கல்வி வளர்ச்சிக் கழகத்தின் புதிய உதவித் திட்டம்

கடந்த 20.12.2020-ஆம் தேதி அன்று நடைபெற்ற கல்வி வளர்ச்சிக் கழக செயற்குழுக் கூட்டத்தில் வரலாற்று சிறப்புமிக்க ஒரு முக்கியமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது மிகுந்த பாராட்டுக்கும், போற்றுதலுக்கும் உரியதாகும்.

குளத்துப்பட்டியைச் சார்ந்த மாணவன் N. விக்னேஷ் மதுரையில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் B.A., (Eco.) வகுப்பில் இந்த ஆண்டு சேர்ந்துள்ளார். அவருடைய தந்தை ஏற்கனவே காலமாகி விட்டதாலும், தாயார் மிக வறுமையில் இருப்பதாலும், தனது பிள்ளையைப் படிக்க வைக்க நினைத்தாலும் கல்விக் கட்டணம் செலுத்த முடியாத சூழ்நிலை. அவர்கள் தனது நிலைமையைக் கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர் மற்றும் செயலாளரிடம் தெரிவித்து உதவி செய்ய கோரினார்கள்.

இன்றைய காலகட்டத்தில் பணம் இல்லை என்கிற காரணத்தால் கல்வி தடைபட்டுவிடக் கூடாது என முடிவு செய்து, தாய் தந்தை இல்லாத ஏழை மாணவர்கள், தந்தையால் கைவிடப்பட்டு தாயாரின் பராமரிப்பில் உள்ள ஏழை குழந்தைகள், மிகவும் வறுமையில் உள்ள குழந்தைகள் ஆகிய பிரிவினருக்கு கல்விக் கட்டணத்தை கல்வி வளர்ச்சிக் கழகமே முழுமையாக ஏற்றுக்கொள்வது சம்பந்தமான தீர்மானத்தை தலைவர் முன்மொழிய, செயலாளர் வழிமொழிய, செயற்குழு உறுப்பினர்களின் முழு ஆதரவோடு நிறைவேற்றப்பட்டது. இந்தத் திட்டத்தை உடனடியாக அமுல்படுத்தும் விதமாக மாணவன் விக்னேஷ் அவர்களுக்கு இந்த ஆண்டு முதலே கல்விக் கட்டணத்தை வழங்க தீர்மானித்தோம். இந்தத் தகவலை நமது மாபெரும் கொடைவள்ளல் திரு A.P. ஸேதுராமன் அவர்களிடம் போன் மூலம் தெரிவிக்க, அவர்களும் இதுபோன்ற ஏழை மாணவர்களின் படிப்பிற்குரிய கல்விக் கட்டணத்தை (Tution Fees) நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன் என பெருமனதோடு நன்கொடை அளிப்பதாக உறுதியளித்துள்ளார்கள். அவரின் வள்ளல் தன்மையையும், பெருந்தன்மையையும் பாராட்டுகிறோம்! வாழ்த்துகிறோம்!!

**– சுப. செல்வம், செயலாளர்**

# மீண்டும் கல்வித்தாய் – தந்தை திட்டம்

குரலின் வளர்ச்சிக்கு கல்வித்தாய் - கல்வித் தந்தை ஆகிடுவீர்!

# ரூ. 10,000/-

ஒருமுறை நன்கொடை வழங்கி

**கல்வித்தாய் - கல்வித் தந்தை திட்டத்தில்**

இன்றே இணைந்திடுவீர்!

**குரலின் முன் அட்டைப்படத்தில்**
**உங்களது போட்டோவுடன்**
**உள்ளே இரண்டு பக்கத்திற்கு**
**தங்களின் குடும்ப வரலாற்றுச் செய்திகளை**
**பதிவு செய்யலாம்**

## தலைவர் சிந்தனை



**செ. ஆசை அலங்காரம்** B.Sc.,
தலைவர்

நற்பண்புமிக்க நகரத்தார் பெருமக்களே! அருமைத் தாய்மார்களே! என் இனிய மாணவச் செல்வங்களே!!

கொரோனாவின் கொடூரம் குறைந்து வசந்தம் மலர்கின்ற இந்த நல்ல வேளையில் 2021 ஆம் ஆண்டின் முதல் குரல் மூலம் உங்கள் அனைவரையும் சந்தித்து இனிய பொங்கல் நல்வாழ்த்துக்களையும், ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும் பகிர்ந்து கொள்வதில் பேரானந்தமும், பெருமகிழ்ச்சியும் அடைகிறேன்.

கல்வி வளர்ச்சிக் கழகத்தில் 2018-21 ஆண்டுகள் கால நிர்வாகத்திற்குப் பொறுப்பேற்று, உங்கள் அனைவரின் உதவியோடும், ஒத்துழைப்போடும் எங்களால் முடிந்த அளவு சேவையாற்றியுள்ளோம். எங்களின் பதவிக்காலம் நிறைவடையும் தருவாயில் உள்ளது. புதிய நிர்வாகிகளை தேர்வு செய்ய வேண்டும். அதற்கான பணிகளைத் தொடங்க வேண்டும். இனிவரும் காலத்திலும் தன்னலமற்ற சேவை மனப்பான்மையுடைய நிர்வாகிகளைத் தேர்ந்து எடுத்து இப்பணி தொடர்ந்து நடத்திட அனைவரின் ஒத்துழைப்பையும் வேண்டுகிறேன்.

கடந்த கொரோனா பாதிப்பு காலத்தில் பள்ளி, கல்லூரிகள் வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகள், போக்குவரத்துக்கள் என அனைத்தும் முடக்கப்பட்டன. ஏன், அரசு நிர்வாகமே தங்களுடைய அன்றாடப் பணிகளை மேற்கொள்ள முடியாமல் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது. இதனால் வளர்ச்சிப் பணிகள் அனைத்தும் தடைபட்டன. பொருளாதாரம் வீழ்ச்சி

அடைந்தது. இந்தக் காலத்தில் மாணவர்கள் அனுபவித்த இன்னல்கள் ஏராளம்.

"கற்றல் நன்று, கற்றபின் கேட்டல் நன்று" என்பது அனுபவப்பூர்வமான முதுமொழி. வகுப்பறைகளில் ஆசிரியர்கள் பாடம் நடத்துவதும், அதனை மாணவர்கள் கேட்பதும், பாடங்கள் நடத்தப்படும் பொழுதே தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களைக் கேட்டு தெளிவு பெறுவதும் என்கிற நிலை மாறி ஆன் – லைன் (on-line) வகுப்புகள் மூலம் பாடங்கள் நடத்தப்படும் சூழ்நிலை உருவானது. அதனால் மாணவர்கள் பட்ட இன்னல்கள் பல. அவர்களின் மனநலம் மற்றும் உடல் நலம் பாதிக்கப்பட்டன. விளையாட முடியவில்லை. கற்பிக்கப்படும் பாடங்களைக் கவனமுடன், சிந்தனைகளைச் சிதறவிடாமல் உற்று நோக்கி பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலை. அதிக நேரம் செல்போனை பார்த்துக் கொண்டே இருப்பதால், கண்களுக்கு வேலைப்பளு கூடுகிறது. கண்களுக்கான ரத்த நாளங்கள் மிகவும் நுண்ணியதாக இருப்பதால், கூர்ந்து நோக்கும்போது கண்களுக்கு இரத்த ஓட்டம் குறையும். அதனால் கண்கள் வலிக்கவும், அதனைத் தொடர்ந்து தலைவலி ஏற்படவும், மூளை சோர்வடையும் வாய்ப்புகள் மிகுதியாக உள்ளன. இதனால் மன அழுத்தம் ஏற்பட்டு, உடல் சோர்வு ஏற்படுகிறது. ஆன்–லைன் வகுப்புகளைக் கவனிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. மேலும் பல நேரங்களில் கிராமப்புறங்களில் நெட் இணைப்பு சரிவர கிடைப்பதில்லை. அதனாலும் பாடம் தடைப்படுகிறது. பல ஏழை மாணவர்களுக்கு, தேவையான வசதிகள் உள்ள செல்போன்கள் இல்லாததாலும் அவர்கள் இந்த ஆன்–லைன் கல்வி மூலம் கல்வி கற்கும் வாய்ப்பை இழக்க நேரிட்டது. **"அனைவருக்கும் தரமான–சமமான கல்வி"** என அரசியல் சட்டம் வழங்கி உள்ள உரிமை மறுக்கப்படுகிறது, தடுக்கப்படுகிறது. இந்தச் சட்டமே நீர்த்து போகக் கூடிய நிலை உருவாகி விடுமோ என அச்சப்பட வேண்டிய நிலை உள்ளது.

மற்றும் ஆரம்பக் கல்வி பயிலும் மாணவர்களும், பெற்றோர்களும் ஆன்லைன் பயிற்றுவித்தல் மூலம் படும் இன்னல்கள் மிக்க கொடுமையானது. ஆன்லைன் வகுப்புகள்

ஆரம்பித்து முடியும் வரை, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் இருக்க வேண்டும். தங்களுடைய வேலைகளை ஒத்திவைக்க வேண்டியுள்ளதால், அவர்களின் அன்றாடப் பணிகள் பாதிக்கப்படுகின்றன. சிறு குழந்தைகளுக்கு விளையாட்டாக வேடிக்கைகள் காட்டி அவர்களின் மன நிலைகளை அறிந்து சொல்லிக் கொடுக்க வேண்டிய கல்வியை, மாணவனும் அவனின் பெற்றோர்களும் ஒரே இடத்தில் ஆடாமல், அசையாமல் உட்கார்ந்து, செல்போனை பார்க்க வேண்டிய நிலை உள்ளன. குழந்தைகளுக்கு பாடங்களைப் புரிய வைக்க ஆசிரியர்களும், பெற்றோர்களும் பெரும்பாடுபட வேண்டியிருக்கிறது.

இந்த அவலங்கள் எல்லாம் விரைவில் மறையும்!
வேதனைகள் குறையும், மகிழ்ச்சி பொங்கும்!
மன நிறைவோடு மன அழுத்தமின்றி
கல்வி பயிலும் காலம் விரைவில் வரும்!
விடியலை நோக்கிக் காத்திருப்போம்!
தை பிறந்தால் வழி பிறக்கும் என்கிற நம்பிக்கையோடு
கல்வியை, வாழ்க்கையைத் தொடருவோம்!

**ஆதரவற்ற, வறுமையில் உள்ள ஏழை மாணவர்களைத் தத்தெடுத்து அவர்களின் கல்விச் செலவு முழுவதையும் கல்வி வளர்ச்சிக் கழகமே ஏற்றுக் கொள்ளலாம் என்கிற சிந்தனை உள்ளது.** அதனை நடைமுறைப்படுத்த நம் சமுதாயத்தில் வசதி வாய்ப்பு உள்ள அனைவரும் தங்களால் இயன்ற பொருள் உதவியை செய்ய வேண்டுகிறேன். “ஒரு ஏழைக்கு எழுத்தறிவித்தல், ஆலயம் பதிநாலாயிரம் கட்டுதல், அன்ன சத்திரங்கள் ஆயிரம் கட்டுவதை விட உயர்ந்த தர்மம், புண்ணியம்” என வேதங்கள் சொல்கின்றன. அந்தப் பெருமையையும், புண்ணியத்தையும் நம்மவர்கள் அனைவரும் பெற வேண்டும் என விரும்புகிறேன்.

வாழ்க வளமுடன்! வாழ்க நலமுடன்!

**அருவியூர் வடக்குவளவு நகரத்தார் பொதுநலச் சங்கம், பிரான்மலை**

# செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்

அருவியூர் வடக்குவளவு நகரத்தார் பொதுநலச் சங்க செயற்குழுக் கூட்டம் 20.12.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணி அளவில் பிரான்மலை மங்கைநாயகர் மன்றத்தில் பொதுநலச் சங்கத் தலைவர் திரு Er. M. மாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு V. கணேசன் அவர்கள் இறைவணக்கம் பாட, அதன்பின் துணைத்தலைவர் திரு மு. சாமிநாதன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். செயலாளர் திரு S. ராமநாதன் B.Com., அவர்கள் செயலாளர் அறிக்கையில், சங்க வளர்ச்சிப் பணிகள் மற்ற நடவடிக்கைகள் குறித்து விரிவாக விளக்கம் அளித்தார். பொருளாளர் திரு S. மங்கைபாகன் அவர்கள் வரவு செலவு அறிக்கை தாக்கல் செய்தார். சேமிப்பு திட்ட அறிக்கையை பொறுப்பாளர் திரு N. மாணிக்கம் அவர்கள் தாக்கல் செய்தார்.

கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு S. ஆசை அலங்காரம் B.Sc. அவர்கள், செயலாளர் திரு சுப. செல்வம் B.Sc., ACA., அவர்கள் கலந்து கொண்டு பொதுநலச் சங்க தற்போதைய நிர்வாகம், கடந்த 4 ஆண்டுகளாக ஆற்றிய வளர்ச்சிப் பணிகள் பற்றி எடுத்துரைத்து, தலைவர் மற்றும் நிர்வாகிகளுக்குப் பாராட்டு தெரிவித்தார்கள். **புதிய நிர்வாகிகள் தேர்தல் வரும் 14.02.2021 அன்று நடத்த முடிவு செய்யப்பட்டது.** தேர்தல் ஆணையர்களாக **கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர்** திரு S. ஆசை அலங்காரம் அவர்கள், செயலாளர் திரு சுப. செல்வம் அவர்கள் மற்றும் துணைத்தலைவர் திரு பொன். சிவஞானம் அவர்கள் நியமனம் செய்து, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்ட அமைப்புச் செயலாளர் திரு V. நேருதாசன் அவர்கள் நன்றி கூற கூட்டம் மதிய விருந்துடன் நிறைவுபெற்றது.

**தகவல்: திரு S. இராமநாதன், செயலாளர், பொதுநலச் சங்கம், பிரான்மலை**

அருவியூர் வடக்குவளவு நகரத்தார் பொதுநலச் சங்கம், பிரான்மலை

# 2021-2024-ஆம் ஆண்டுக்குரிய நிர்வாகிகள் தேர்தல் அறிவிப்பு

தற்போது உள்ள பொதுநலச் சங்க நிர்வாகிகள் வருகிற மே மாதம் நடைபெறவுள்ள ஆறாம் திருவிழாவுடன் பணிநிறைவு பெறுகின்றனர். எதிர்வரும் 2021-24 காலத்திற்கான மூன்று ஆண்டுகளுக்கு, பொதுநலச் சங்கத் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் பதவிகளுக்கு பிரான்மலை மங்கைநாயகர் மண்டபத்தில் 14-02-2021 ஆம் நாள் தேர்தல் நடைபெற உள்ளது என்பதை நகரத்தார் பெருமக்கள் அனைவருக்கும் இதன்மூலம் தெரியப்படுத்துகின்றோம்.

## தேர்தல் அட்டவணை விவரம்

வேட்புமனுத் தாக்கல் செய்யும் நாள் : 14-02-2021 ஞாயிறு

நேரம் : காலை 10-12 மணிவரை

வேட்பு மனு பரிசீலனை : மதியம் 12-12.30

வேட்பு மனு திரும்பப் பெற : பிற்பகல் 12.30 - 1.00

இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியீடு : பிற்பகல் 2.00 மணி.

**போட்டியிருப்பின் தேர்தல் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.**

மேற்கண்ட பதவிகளுக்குப் போட்டியிட விருப்பம் உள்ள நகரத்தார்கள் 14-02-2021 நாளன்று நேரில் வந்து வேட்பு மனுத்தாக்கல் செய்யும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

1. ஒருவர் ஒரு பதவிக்கு மட்டுமே போட்டியிடலாம்.
2. வேட்புமனு கட்டணம் ரூ.100/-
3. வேட்பு மனுவுடன் வைப்புத் தொகையாக ரூ. 500/- செலுத்த வேண்டும்.

**இப்படிக்கு**
**தேர்தல் ஆணையாளர்கள்,**
**S. ஆசை அலங்காரம், சுப. செல்வம்,**
**பொன். சிவஞானம்**

# அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகக் குழு நிகழ்வுகள்

6-12-2020 அன்று கொட்டாம்பட்டி கல்வி வளர்ச்சிக் கழக வணிகவளாகத்தில் நடைபெற்ற நிர்வாக குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம்:

1. அ.வ.ந. நகரத்தார் குரல் புத்தகத்தின் ஆண்டு சந்தா தொகை மற்றும் விளம்பரக் கட்டணங்கள் எந்தவித உயர்வும் இன்றி கடந்த ஆண்டு வசூலித்தது போன்று இந்த ஆண்டும் தொடர்வது என்று முடிவு செய்யப்பட்டது.
2. ஆடிட்டர் தணிக்கைக் கட்டணம் 2018-19 மற்றும் 2019-20 கணக்காண்டுகளுக்கு, ஆண்டுக்கு ரூ. 7500/- வீதம் வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது.
3. கடை எண் 4 மற்றும் 5-ன் உரிமையாளர் திரு சா. கணேசன் அவர்கள் கடை நடத்தாத கொரோனா பெருந்தொற்று காலத்திற்கு (Lockdown period) வாடகை தள்ளுபடி கோரிய விண்ணப்பத்தை பரிசீலித்து கொரோனா காலத்திற்கு அவருக்கு ஒரு மாதம் மட்டும் வாடகை தள்ளுபடி வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது. (மொத்த வாடகை தள்ளுபடி ரூ. 7,000/-)
4. மார்ச் 2020 முதல் வாடகைக்கு விடப்பட்ட கடை எண் 3 மற்றும் புதிதாக கட்டப்பட்ட மாடி அறைகள் தொடர்ந்து கொரோனா பெருந்தொற்று காரணமாக செயல்படாததால், கடை உரிமையாளர் திரு உ. ராஜகோபால் கேட்டுக் கொண்டதற்கிணங்க வாடகை தள்ளுபடி செய்யலாம் எனவும், அதன்பின் வாடகையை 8-09-2020 முதல் வசூலிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.
5. கொட்டாம்பட்டி கட்டிடத்தின் முதல் மாடியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 5 அறைகள், மாடிப்படிகள், ஆழ்துளைக் கிணறு இவற்றிற்கான கட்டுமான மொத்த செலவு ரூ.19,96,900/- சரிபார்க்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டது.

6. இலவச கல்வி உதவித் தொகை மற்றும் கடன் வழங்கப்படும் காலம் 31-12-2020 வரை நீடிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. மேலும் டாக்டர் தியாகராஜன் அவர்களின் மேல் படிப்பிற்கான விண்ணப்பத்தை பரிசீலனை செய்து இலவச உதவித் தொகை மற்றும் கடன் வழங்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.
7. தங்கம் மற்றும் வெள்ளி உலோகங்கள் விலையேற்றத்தின் காரணமாக 10-வது மற்றும் +2 மாணவர்களுக்கு வழங்கப்படும் தங்கம், வெள்ளி மெடல்கள் வழங்குவதற்கான செலவு தொகை குறித்து விவாதிக்கப்பட்டு, இறுதியாக நன்கொடையாளர்கள் தரும் தொகைக்கு ஏற்ப மெடல்கள் வழங்கலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
8. வரும் 20-12-2020 ஞாயிற்றுக்கிழமை அன்று செயற்குழுக் கூட்டம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.
9. 2021-24 காலத்திற்கான புதிய நிர்வாகிகள் தேர்தல் பற்றி 20-12-2020 அன்று நடைபெறவுள்ள செயற்குழுவில் முடிவெடுக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.
10. 2019-20-ஆண்டுக்கான பொதுக்குழுக் கூட்டம் நடத்துவது பற்றியும்,20-12-2020 அன்று நடைபெறவுள்ள செயற்குழுவில் முடிவு செய்யலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.
11. நகரத்தார் குரல் வளர்ச்சிக்காக **கல்வித்தாய்-கல்வித் தந்தை நன்கொடை திட்டம்** மீண்டும் தொடர்வது என்று தீர்மானிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் தங்கள் தாய் தந்தையருக்கு பெருமை சேர்க்க விரும்புவர்களின் தாய்-தந்தையரை கல்வித்தாய்-கல்வித் தந்தை என அறிவித்து அவர்களின் படத்தை **குரல் முன்** அட்டையில் பிரசுரிப்பதுடன், அவர்களின் குடும்பத்தை பற்றிய செய்திகள் இரண்டு பக்கங்கள் வெளியிடலாம் எனவும் அதற்கு நன்கொடையாக ரூ.10,000/- நிர்ணயித்து வசூல் செய்யலாம் எனவும் முடிவு செய்யப்பட்டது.

**சுப. செல்வம்,**
**செயலாளர்,**
**அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்.**

அருவியூர் வடக்குவளவு நகரத்தார் கல்வி வளர்ச்சிக் கழக

# செயற்குழு கூட்ட நிகழ்வுகள்

கல்வி வளர்ச்சிக் கழகத்தின் இரண்டாவது செயற்குழுக் கூட்டம் 20-12-2020 அன்று ஞாயிற்றுக்கிழமை பிரான்மலை மங்கை நாயகர் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்த செயற்குழு உறுப்பினர்களுக்கும் மற்றும் சிறப்பு உறுப்பினர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம்:**

1. கல்வி வளர்ச்சிக் கழகத்தின் 2019-20 ஆம் ஆண்டுக்கான பொதுக்குழுக் கூட்டம் **31-01-2021** அன்று நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.
2. கல்வி வளர்ச்சிக் கழகத்தின் 2021-24 ஆம் காலத்திற்கான நிர்வாகிகள் தேர்தல் **21-02-2021** அன்று பிரான்மலை மங்கைநாயகர் மன்றத்தில் நடத்துவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

   மேலும் தேர்தல் அதிகாரிகளாக பொது நலச் சங்கத் தலைவர் Er. M. மாணிக்கம் அவர்கள், செயலாளர் திரு S. இராமநாதன் அவர்கள், பொருளாளர் திரு S. மங்கைபாகன் அவர்கள் மூவரையும் தேர்தல் அதிகாரிகளாக நியமிப்பது என முடிவு செய்யப்பட்டது.
3. இந்தக் கல்வி ஆண்டில் கீழ்க்கண்ட ஊர்களில் உள்ள அரசுப் பள்ளிகளுக்கு புரவலர் நிதி வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது. **(i) கிருங்காக்கோட்டை (ii) சிங்கம்புணரி (iii) K. புதுப்பட்டி, (iv) காளாப்பூர் (v) அம்மன்குறிச்சி (vi) பொன்னமராவதி.**
4. பெற்றோர்கள் இல்லாத மற்றும் ஆதரவற்ற நமது நகரத்தார் குழந்தைகளின் கல்விக் கட்டணம் முழுவதையும் கல்வி வளர்ச்சிக் கழகம் நன்கொடையாளர்கள் உதவியுடன் ஏற்றுக்கொள்வது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

   செயலாளர் திரு சுப. செல்வம் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

**இப்படிக்கு,**
**சுப. செல்வம். செயலாளர்**
**அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்**

அருவியூர் வடக்குவளவு நகரத்தார் கல்வி வளர்ச்சிக் கழகம்,
2021-2024-ஆம் ஆண்டுக்குரிய

# நிர்வாகிகள் தேர்தல் அறிவிப்பு

தற்போது உள்ள கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகிகள் வருகிற மே மாதத்துடன் பணிநிறைவு பெறுகின்றனர். வரும் 2021-24 காலத்திற்கான 3 ஆண்டுகளுக்கு, கல்வி வளர்ச்சிக் கழத்திற்கு தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் பதவிகளுக்கு பிரான்மலை மங்கைநாயகர் மண்டபத்தில் 21.02.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று தேர்தல் நடைபெற உள்ளது என்பதை நகரத்தார் பெருமக்கள் அனைவருக்கும் இதன்மூலம் தெரியப்படுத்துகின்றோம்.

## தேர்தல் அட்டவணை விவரம்

வேட்பு மனுத்தாக்கல் செய்யும் நாள் : 21-02-2021 ஞாயிறு
நேரம் : காலை 10-12 மணிவரை

வேட்பு மனு பரிசீலனை : மதியம் 12-12.30

வேட்பு மனு திரும்பப் பெற : பிற்பகல் 12.30-1.00

இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியீடு : பிற்பகல் 2.00 மணி.

**போட்டியிருப்பின் தேர்தல் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.**

மேற்கண்ட பதவிகளுக்குப் போட்டியிட விருப்பம் உள்ள நகரத்தார்கள் 21-02-2021 நாளன்று நேரில் வந்து வேட்பு மனுத்தாக்கல் செய்யும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

1. ஒருவர் ஒரு பதவிக்கு மட்டுமே போட்டியிடலாம்.
2. வேட்புமனு கட்டணம் ரூ.100/-
3. வேட்புமனுவுடன் வைப்புத்தொகையாக ரூ.500/- செலுத்த வேண்டும்.

**இப்படிக்கு**
**தேர்தல் ஆணையாளர்கள்**
**Er. M. மாணிக்கம், S. ராமநாதன் ,**
**S. மங்கைபாகன்.**

# கழக அறிவிப்புகள் 2021

## 1. கல்விக் கடனை திருப்பிச் செலுத்துதல் :

**கல்விக் கடன் பெற்று ஜுன் 2019-க்கு முன்னர் படிப்பை முடித்தவர்கள் அனைவரும் தங்களது கல்விக் கடனை திருப்பிச் செலுத்தி முடிக்க வேண்டுகின்றோம்.**

கல்வி வளர்ச்சிக் கழகத்திடமிருந்து கல்விக்கடன் பெற்று ஜுன் 2020-இல் படித்து முடித்தவர்கள் ஜுன் 2021 -க்குள் திருப்பிச் செலுத்த வேண்டும் என்பதை நினைவூட்டுகிறோம். ஏற்கனவே கல்விக் கடன் பெற்றவர்களில் முழுவதுமாக செலுத்தாதவர்கள் மேலும் தாமதிக்காமல் உடனடியாக செலுத்த வேண்டுகிறோம்.

மாணவர்கள் தங்கள் கடன் தொகையை இந்தியன் வங்கி, புதுப்பட்டி கிளை மூலம் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

பணம் அனுப்ப வங்கி கணக்கு விவரங்கள் :

| | | |
|---|---|---|
| வங்கி | : | இந்தியன் வங்கி, புதுப்பட்டி கிளை |
| கணக்கின் பெயர் | : | AVN Kalvi Valarchi Kazhagam |
| **SB Account No.** | : | **4937 40102** |
| IFSC Code | : | IDIB000P052. |

பணத்தை வங்கியில் கட்டியவுடன், பணம் கட்டிய ரசீதின் Counterfoil ஜெராக்ஸ் காபியை உடனே WhatsApp அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்க வேண்டும். அது கிடைத்த பின்தான் ரசீது அனுப்பி வைக்கப்படும். கல்வி வளர்ச்சிக் கழக WhatsApp No. 63744 59670 or 94444 68900.

**– சுப. செல்வம், செயலாளர், கல்வி வளர்ச்சிக் கழகம்**

## திருமண நிகழ்ச்சி

செம்பங்கூருடையார் சிறுகுடி திரு ஆ. நாகராஜன் செட்டியார்-தெய்வத்திருமதி நா. செண்பகம் ஆச்சி இவர்களது குமாரன் திருவளர்ச் செல்வன் **நா. ஸ்ரீராம் MBA.,** கிருங்காக்கோட்டை அரும்பாக்கிளையார் பிரான்மலை திரு த. தேவேந்திரன் செட்டியார் - செல்வி ஆச்சி இவர்களது குமாரத்தி திருவளர்ச் செல்வி **அங்காளபரமேஸ்வரி (என்ற) தே. சத்யா** இவர்களது திருமணம் 21-08-2020 வெள்ளிக்கிழமை அன்று சிறுகுடி அ.வ.ந. திருமண மண்டபத்தில் சுற்றமும், நட்பும் வாழ்த்த சிறப்பாக நடைபெற்றது.

**தகவல் : திரு மு.செ. நாகராஜன், பொன்-புதுப்பட்டி.**

உ

முதல் கல்விக்காவலர் குடும்பத்தினரின் 2021 புத்தாண்டில் மகிழ்ச்சியான செய்தி

# இராமேஸ்வரத்தில் நமது நகரத்தார் விடுதி

நமது நகரத்தார்கள் அனைவரும் இலவசமாகத் தங்கி அருள்மிகு பர்வதவர்த்தினி சமேத இராமநாதசுவாமியை தரிசனம் செய்து மற்றும் அருகிலுள்ள அனைத்து சிறப்பு வாய்ந்த இடங்களையும் கோயில்களையும் தரிசனம் செய்ய வசதியாக ஆரம்பித்து உள்ளோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**விலாசம் : அருவியூர் வடக்குவளவு நகரத்தார் விடுதி**
**சுப. இராஜகோபால் இல்லம்,**
**21 / 3 இத்தி தெரு, இராமேஸ்வரம்**

**முன்பதிவிற்கு - செல் : 94454 51450, 94457 36936**

இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோவிலின் வடகிழக்கு மூலையிலிருந்து வடபுறம் சுமார் 100 மீட்டர் தூரத்தில் நமது அருவியூர் வடக்குவளவு நகரத்தார் விடுதி அமைந்துள்ளது.

**விடுதியின் சிறப்பு :**

நமது சமூகத்தின் முதல் கல்விக்காவலர் அம்மன்குறிச்சி தெய்வத்திருவாளர்கள் வெ.ராம. சுப்ரமணியன் செட்டியார்-அன்னபூரணி ஆச்சி அவர்களின் கனவை நிறைவேற்றும் வகையில்,

அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழக முன்னாள் தலைவர், கல்விக்காவலர் தெய்வத்திரு சுப. துரைராசு செட்டியார், கல்வி வளர்ச்சிக் கழகச் செயலாளர், கல்விக் காவலர், திரு சுப. செல்வம் மற்றும் சென்னை MMDA காலனி அய்யா திரு. அரு. மணி செட்டியார் இவர்களின் பெரும் முயற்சியாலும்,

சென்னை சங்க செயலாளர், கல்விக்காவலர் திரு சுப. நேசமணி செட்டியார் மற்றும் இளைய சகோதரர் சுப. திருஞானசம்பந்தம் செட்டியார் இவர்களின் ஆலோசனைப் படியும்,

இராமேஸ்வரம், அலகாபாத், கயா, காசி, சிறப்பு தெய்வீக இலவச சுற்றுலா அமைப்பாளர்களான திரு சுப. இராஜகோபால் செட்டியார்-திருமதி ரேணுகா ஆச்சி மற்றும் அவர்களின் புதல்வர் திரு இரா. சண்முகநாதன் B.E., அவர்களும் இந்த விடுதியை நமது நகரத்தார் பெருமக்கள் பயன்பெறும் வகையில் அமைத்துள்ளோம்.

நகரத்தார்கள் அனைவரும் எங்களது இந்த சேவையினை பயன்படுத்தி இறையருள் பெற மகிழ்வுடன் அழைக்கின்றோம்.

**தகவல் : இரா. சண்முகநாதன் B.E., நங்கநல்லூர், சென்னை-61**

# தமிழின் சுவை

சென்ற இதழில் ஓரெழுத்து வெண்பாவாக ‘த’ வரிசையில் எழுதியது போன்று இங்கு ‘க’ வரிசையில் அமைந்த தமிழின் சுவையான பாடலை 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த காளமேகம் என்னும் சிலேடைப் புலவர் இயற்றிய பாடல்:

**“காக்கைக்கா காகூகை கூகைக்கா காகாக்கை**
**கோக்குக்கூ காக்கைக்குக் கொக்கொக்க - கைக்கைக்குக்**
**காக்கைக்குக் கைக்கைக்கா கா”**

**பொருள் :**

காக்கையானது பகலில் கூகையை (ஆந்தையை) வெல்ல முடியும். கூகையானது இரவில் காக்கையை வெல்ல முடியும். கோ எனும் அரசன் பகைவரிடத்திலிருந்து தம் நாட்டை இரவில் ஆந்தையைப் போலவும், பகலில் காக்கையைப் போலவும் காக்க வேண்டும். எதிரியின் பலவீனமறிந்து, கொக்கு காத்திருப்பது போல தக்க நேரம் வரும் வரை காத்திருந்து தாக்க வேண்டும். தகுதியற்ற காலம் எனில் தகுதியான அரசனுக்குக் கூட வெற்றி கையாலாகிவிடக் கூடும்.

- சுப. செல்வம், குரலாசிரியர்.


**கொட்டாம்பட்டி பேருந்து நிலையம் எதிரில் ஓர் இனிய உதயம்**



## சென்னை P.V. கண்ணன் செட்டியார் - புவனேஸ்வரி ஆச்சி இல்லத் திருமணவிழா



மணமக்கள்:

**செல்வன் க. ராம்குமார் B.C.A.,**

**செல்வி சு. பவித்ரா B.E.,**

நிகழ்விடம்: மங்கைநாயகர் திருமண மண்டபம்,
பொன்னமராவதி

திருமண நாள்:
18-10-2020, ஞாயிற்றுக்கிழமை

# புதுமண தம்பதிகள்

மணமக்கள்:
செல்வன் **V.S. இளையராஜா** M.E., - செல்வி **S. சத்யா** BBA.,



மணமகனின் பெற்றோர் :
திரு V.S. சண்முகநாதன் – S. ராஜராஜேஸ்வரி
சிவகாசி.
மணமகளின் பெற்றோர்:
திரு சே. சண்முகநாதன் செட்டியார்
– திருமதி செல்லம் ஆச்சி, கல்லம்பட்டி–சென்னை.

நிகழ்விடம்: ஹோட்டல் அண்ணாமலை அஞ்சப்பர் சங்கமித்ரா திருமண ஹால், பொன்னமராவதி திருமண நாள்: 30-10-2020 வெள்ளிக்கிழமை

---

மணமக்கள்: செல்வன் **லெ.நா. இனியன்** M. Tech (Structural) M.Sc.,(Val)
செல்வி **மயிலம்மாள்** என்ற **க.ச. ரேவதி** B.E.,(ECE).,



மணமகனின் பெற்றோர்:
வாழ்வுநிறை அ.லெ. நாராயணன் செட்டியார்
நலமுடன் மீனாட்சி ஆச்சி, பொன்னமராவதி.
மணமகளின் பெற்றோர்:
வாழ்வுநிறை G. சத்தியமூர்த்தி செட்டியார் –
நலமுடன் அன்புச்செல்வி, படமிஞ்சி.

நிகழ்விடம்: நாட்டுக்கோட்டை நகரத்தார் திருமண மண்டபம்,
பொன்னமராவதி திருமணநாள்: 27-11-2020 வெள்ளிக்கிழமை

---

மணமக்கள்: செல்வன் **சா.ரா. அமர்நாத்** DECE.,
செல்வி **அலங்காரி (எ) மீனாட்சி** B.Sc.,



மணமகனின் பெற்றோர்:
திரு. ரா. சா. ராஜா செட்டியார்
– கலைமணி ஆச்சி, புழுதிபட்டி (கோவை)
மணமகளின் பெற்றோர்:
திரு. ம. திருநாவுக்கரசு செட்டியார்
– செந்தாமரை ஆச்சி, பொன்னமராவதி.

நிகழ்விடம்: I.J. மஹால், குனியமுத்தூர்–கோவை.
திருமண நாள்: 31-08-2020 திங்கட்கிழமை

---

மணமக்கள்: செல்வன் **அலங்காரம் (எ) தி. அரசு ராமநாதன்** MCA.,-
செல்வி **செண்பகவள்ளி (எ) சே. அகஸ்தியா** B.Sc



மணமகனின் பெற்றோர்:
திரு ம. திருநாவுக்கரசு செட்டியார் –
செந்தாமரை ஆச்சி, பொன்னமராவதி.
மணமகளின் பெற்றோர்:
திரு பழ. சேது செட்டியார்–ரேணுகா ஆச்சி, படமிஞ்சி.

நிகழ்விடம் : மங்கைநாயகர் திருமண மண்டபம்,
பொன்னமராவதி. திருமண நாள்: 29-10-2020 வியாழக்கிழமை

# புதுமண தம்பதிகள்

மணமக்கள்:
**செல்வன் R. தீபக் பரமானந்தம் M.E., -**
**செல்வி M. ஜெயஸ்ரீ B.Com., (P.A.)**



மணமகனின் பெற்றோர்:
திரு. ப. இரவிச்சந்திரன் செட்டியார் -
திருமதி இராஜேஸ்வரி ஆச்சி, திண்டுக்கல்
மணமகளின் பெற்றோர்:
வாழ்வுநிறை ஆ.மயிலேசன் செட்டியார்
நலமிகு ம. சாந்தி ஆச்சி, சொக்கம்பட்டி

நிகழ்விடம்: அ.வ.ந. சங்க மங்கைநாயகர் திருமண மண்டபம், திண்டுக்கல்.
திருமண நாள்: 27-11-2020 வெள்ளிக்கிழமை.

மணமக்கள்:
**செல்வன் க. இளையராஜா M.Sc., M.A.,B.Ed., DCA**
**செல்வி சி. செண்பகவள்ளி (எ) ஆர்த்திகா B.Sc., L.L.B.**



மணமகனின் பெற்றோர்:
திரு ந. கணேசமூர்த்தி செட்டியார் - மஞ்சுளா ஆச்சி,
சொக்கம்பட்டி
மணமகளின் பெற்றோர்:
தெய்வத்திரு சிவலிங்கம் செட்டியார் -
நலமுடன் அன்புமலர் ஆச்சி, விழுப்புரம்

நிகழ்விடம்: ஸ்ரீ காமாட்சி அம்மன் -ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஆலயம், சொக்கம்பட்டி
திருமணநாள்: 18-10-2020 ஞாயிற்றுக்கிழமை

மணமக்கள்:
**செல்வன் க. ராம்குமார் B.C.A.,**
**செல்வி சு. பவித்ரா B.E.,**



மணமகனின் பெற்றோர்;
திரு P.V. கண்ணன் செட்டியார்-
திருமதி க. புவனேஸ்வரி, ஆலவயல் / சென்னை

மணமகளின் பெற்றோர்:
திரு RM. சுப்ரமணியன் - திருமதி ராஜேஸ்வரி
பொன்னமராவதி

நிகழ்விடம்: மங்கைநாயகர் திருமண மண்டபம், பொன்னமராவதி
திருமண நாள்: 18-10-2020, ஞாயிற்றுக்கிழமை

**37**வது கல்விக்காவலர் திரு. **சி. வெள்ளைச்சாமி செட்டியார்** அவர்கள்
தன் குடும்பத்தினருடன்...





கிருங்காக்கோட்டை திரு. **V. லட்சுமணன் செட்டியார்** அவர்கள் ரூ. **100000/-** ஒரு லட்சம் நன்கொடை வழங்கி 38வது கல்வி காவலராக இணைந்துள்ளார்கள் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கின்றோம். (முழு விபரம் அடுத்த இதழில்.)

– செயலாளர் சுப. செல்வம்.

# 37-வது கல்விக்காவலர் - வாழ்க்கை வரலாறு



இந்த மாத அட்டைப்படத்தை அலங்கரித்து அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகத்தின் 37-வது கல்விக் காவலர்களாக பெருமை சேர்ப்பவர்கள் கோவை குனியமுத்தூர் திரு சி. வெள்ளச்சாமி செட்டியார் - திருமதி சாந்தி தம்பதியர். இவர்களின் பூர்வீகம் சிறுகுடி. குடிப்பட்டம் - பொன்னமராவதி பூண்டிலூருடையார்.

பிறந்த நாள் : 5.8.1963. திருமணநாள் : 27.7.1988.

## இளமைக் காலம் :

திரு சி. வெள்ளச்சாமி செட்டியார் அவர்கள் சிறுகுடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஆரம்பகால கல்வி பயின்றார். இவருக்கு 9-வயது ஆகும்போது இவரது தந்தை காலமாகி விட்டதால், படிப்பைத் தொடர இயலாத சூழ்நிலை. சிறுவயதிலேயே குடும்ப பொறுப்பை ஏற்க வேண்டிய கட்டாயம். அதனால் 1977 - ஆம் ஆண்டில் தஞ்சாவூர் திரு கதிரேசன் செட்டியார் தேநீர் கடையில் 2 ஆண்டு காலமும், அதன்பின் 4 ஆண்டு காலம் (1979-1982) பெங்களூர் திருவாளர்கள் சிவமணி - ஆறுமுகம் (பூர்வீகம் - கிருங்காக்கோட்டை) தேநீர் கடையிலும் வேலை பார்த்து தன் தந்தை பெற்ற கடனை தன்னுடைய ரூ. 185-00 சுய சம்பாத்தியம் மூலம் அடைத்து, ''நாணயமுள்ளவர்கள் நகரத்தார்கள்'' என்பதை தன் சிறுவயதிலேயே நிரூபித்து, நகரத்தார் இனத்திற்கு பெருமை சேர்த்தவர்.

## தொழில் அனுபவங்கள் :

அதன்பின் சொந்தமாகத் தொழில் தொடங்க வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்க, தன் பெரியப்பா நல்லமுத்தன் செட்டியார் அவர்களுடன் கூட்டாகச் சேர்ந்து கிராமங்களிலுள்ள விவசாயிகளின் இருப்பிடத்திற்கே சென்று தானியங்கள், பருத்தி,

எள், உளுந்து, மிளகாய், நிலக்கடலை முதலான விவசாய விளை பொருட்களை கொள்முதல் செய்து சிங்கம்புணரி, திண்டுக்கல், மதுரை போன்ற பெருநகரங்களில் உள்ள ஆயில் மில் மற்றும் கமிஷன் கடைகளுக்கு கொண்டு விற்பனை செய்து தன் தொழிலை சிறுகச் சிறுக படிப்படியாக Slow and steady to win the race என்ற முதுமொழிக்கேற்ப தன் தொழிலை வளர்த்து வந்தார். அந்தக் காலகட்டத்தில் இரவு பகல் பாராது ஊண் உறக்கமின்றி உழைத்தார். அந்த உழைப்பும், விடாமுயற்சியும் அவருக்கு வெற்றியைத் தேடித் தந்து, பின்னாளில் அவரை ஒரு சிறந்த வெற்றியாளராக, உழைப்பால் உயர்ந்த மனிதராக, சமுதாயத்தில் அவரை மதித்துப் போற்றும் அளவிற்கு உயர்த்தியுள்ளது.

### இல்லற மனை(வி) மாட்சி :

கல்விக் காவலர் திரு S. வெள்ளைச்சாமி செட்டியார் அவர்கள் ஜுலை 1988-இல் கிருங்காக்கோட்டை திரு மு. இராமலிங்கம் செட்டியார் - பஞ்சவர்ணம் ஆச்சி இவர்களின் மகள் சாந்தியை வாழ்க்கைத் துணையாக ஏற்றார். இவர் மனை மாட்சிமைக்குரிய நற்பண்புகள் கொண்டவர். தன் குடும்பத்தை நல்லதொரு பல்கலைக்கழகமாக வளர்த்த பெருமை இவரையே சாரும். மருமகள்களை மகள்கள் போல் பாவித்து அன்பு பாராட்டும் பண்பாளர். குடும்பத்தில் கணவர், மகன்கள், மருமகள்கள் மற்றும் உறவினர்களிடம் எந்தச் சூழ்நிலையிலும் முரண்பாடுகள் ஏற்படா வண்ணம் அனைவரிடமும் அனுசரித்து நடந்து, குடும்பம் சீராக, செம்மையாக முன்னேற தன் துணைவரான, நம் கல்விக்காவலருக்கு உறுதுணையாக இருந்து, மதிநுட்ப ஆலோசனைகளை வழங்கிய ஒப்பற்ற பெண்மணி. இவர்களது இரு மகன்களும் தந்தை சொல்லை மந்திரமாகவும், தாய் சொல்லைத் தட்டாமலும் நடந்து பெற்றோருக்கு பெருமை சேர்க்கும் நற்பண்பாளர்கள்.

### சங்கப் பணி :

கோவை சங்கத்தின் துணைத் தலைவர், பொதுநலச் சங்க செயற்குழு உறுப்பினர் (25 ஆண்டுகள்) முதலான நம் சமுதாய பொறுப்புகளை ஏற்று சிறப்பாக சேவையாற்றி உள்ளார். சிறுகுடி நகரத்தார்களால் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபம்

உருவாக சிரம தானமும், பொருள் தானமும் வழங்கி பெரும் பங்காற்றியுள்ளார்கள். இம்மண்டப இயக்குநர் குழுவின் உறுப்பினராகவும், சிறப்பாக சேவையாற்றி வருகிறார். சிறுகுடி சங்க வரலாற்றில், முன்னேற்றத்தில் அவரின் பங்களிப்பு எப்போதும் இருந்து வந்துள்ளது என்பது போற்றிப் பாராட்டப்பட வேண்டியதாகும்.

## உற்றார் உறவினர்கள் :

**பாசமிகு பெற்றோர்கள் :**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் வட்டம் சிறுகுடி தெய்வத்திரு ந. சிவசாமி செட்டியார் – நலமுடன் செண்பக ஆச்சி.

**பெருமைக்குரிய பெயர் சொல்லும் நன்மக்கள் :**

1) வெ. வினோத் குமார் B.B.M., – ஞான செளந்தர்யா B.Sc., குனியமுத்தூர், கோவை.

2) வெ. விவேக்குமார் B.Com., M.B.A., – காயத்ரி B.E.,

**குழலினியும் இனிய பேரன் பேத்திகள் :**

V. ரிஷிகா ஸ்ரீ (பேத்தி), V. ரித்திக் ஸ்ரீ (பேரன்)

**மதிப்புமிகு மாமனார் – மாமியார் :**

கிருங்காக்கோட்டை மு. இராமலிங்கம் செட்டியார் – தெய்வத்திரு பஞ்சவர்ணம் ஆச்சி.

**அன்புக்குரிய சகோதரி :**

திருமதி தனலட்சுமி – தெய்வத்திரு மா. பாண்டியன்,பொள்ளாச்சி.

**மாண்பிற்குரிய மைத்துனர் :**

திரு ராம. நாராயணன் செட்டியார் – ராஜாத்தி ஆச்சி, கோவை.

**தோள்கொடுக்கும் சகலை :**

புழுதிபட்டி திரு ந. மாசிலாமணி செட்டியார் – பரமேஸ்வரி ஆச்சி, குனியமுத்தூர், கோவை.

**மதிப்பிற்குரிய சம்பந்திகள் :**

1. சிறுகுடி திரு M. வைத்திலிங்கம் செட்டியார் – விஜய குமாரி ஆச்சி (சொக்கம்பட்டி – பூர்வீகம்)
2. நத்தம் திரு ந. ஞானசேகரன் செட்டியார் – பூமணி ஆச்சி (சிறுகுடி– பூர்வீகம்)

## கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவரின் வாழ்த்து :

குடும்ப சூழ்நிலை மற்றும் வறுமை காரணத்தால் தனக்கு கிடைக்காத கல்வி நம் சமுதாயத்தில் ஏழ்மையில் உள்ள பிற மாணவர்களுக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்கிற உயரிய நோக்கமே அவரை ஒரு கல்விக்காவலராக உருவாக்கியுள்ளது. அவரின் நற்பண்பையும், உயர்ந்த உள்ளத்தையும் வள்ளல் தன்மையையும் போற்றிப் பாராட்டி வாழ்த்துகிறேன்! அவரும் அவரின் குடும்பத்தினரும் நலமோடும் வளமோடும் பல்லாண்டு காலம் சிறப்போடு வாழ்வாங்கு வாழ கல்வி வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் வாழ்த்துகின்றேன்!

உழைப்பால் உயர்ந்த அவரின் வாழ்க்கையை நம் இளைய தலைமுறையினர் கடைபிடித்து நடந்து வாழ்க்கையில் முன்னேற, அவரின் இந்த வாழ்க்கைப் பயணத்தை எடுத்துக்காட்டாக எடுத்துக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். **– தலைவர். கல்வி வளர்ச்சிக் கழகம்.**

உ

சிவமயம்

வானிற்பொலி வெய்தும்மழை மேகங்கிழித் தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற்கொடுங் குன்றம்
ஆனிற்பொலி வைந்துமமர்ந் தாடியுல கேத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு மேயான்திரு நகரே

திருஞான சம்பந்தர் அருளிய
திருக்கொடுங்குன்ற பதிகம்

குரல் சிறக்க வாழ்த்துக்கள்

**அன்புமணி மெடிக்கல்**

**சின்னக்கடை வீதி, 260, அண்ணாசாலை,**
**பொன்.புதுப்பட்டி, பொன்னமராவதி.**
**போன் : 04333 260285, செல் : 94423 58165**

# திருவாதிரைப் பெருவிழா



மார்கழி மாதம் மிகவும் சிறப்புடைய மாதம். அனைத்து மதம் சார்ந்தவர்களும் நோன்பு இருத்தல், கிறிஸ்துமஸ் கொண்டாட்டம், வைணவர்கள் வைகுண்ட ஏகாதசி, அனுமன் ஜெயந்தி இவைகள் அனைத்தும் ஒரு சேர அமையப் பெற்ற மாதம் மார்கழி பீடு மாதம் (பெருமையுள்ள) நாளடைவில் பீடை மாதம் என்று திரித்து வழங்கலாயிற்று. மார்கழியில் வரும் திருவாதிரை நட்சத்திரம் நடராஜ பெருமானுக்கு உகந்தது. பட்டினத்தடிகளின் கணக்கராக இருந்த 'சேந்தனார்' தனது மனைவி மக்களுடன் சிதம்பரத்தில் தங்கி இருந்தார். சிறந்த சிவ பக்தரான இவர் தினமும் சிவனடியாருக்கு அன்னம் அளித்தபின்பே உணவருந்துவார். ஒரு அடைமழை காலத்தில் உணவு தயாரிக்க இயலாமல் வீட்டில் இருந்த அரிசி மாவைக் கொண்டு களி அமுது செய்து சிவனடியாருக்காக காத்திருந்தார். அப்போது நடராஜப் பெருமான் வயோதிக சிவனடியாராகத் தோன்றி களியமுதை உண்டு மீதியைத் தன் பழைய கந்தைத் துணியில் கட்டிக் கொண்டு சென்றார். மறுநாள் தில்லைக் கூத்தனின் மேனி எங்கும் மற்றும் திருசிற்றம்பலத்திலும் களி சிதறிக் கிடக்க தில்லைவாழ் அந்தணர்கள் அதிர்ச்சி அடைந்தனர். அப்போது அசரீரியாக **"சேந்தனும் அவரின் மனைவியும் அன்புடன் அளித்த விருந்து"** எனக் கேட்டது. அன்றிலிருந்துதான் திருவாதிரைக்கு களி படைக்கும் பழக்கம் ஏற்பட்டது.

ஆனி மாதம், மார்கழி திருவாதிரை நாளில் சிவகாமி உடனுறை நடராஜ பெருமான் தேரில் எழுந்தருளி மாட வீதிகளில் வலம் வருவார். தார் சாலை இல்லாத கால கட்டத்தில் தேர் ஒரு இடத்தில் சிக்கிக் கொண்டது. எவ்வளவு முயன்றாலும் அசையவில்லை. அப்போது **"சேந்தனை அழைத்து வா"** என அசரீரி சொல்ல சேந்தனார் அங்கு அழைத்து வரப்பட்டார். இறைவன் அருளால் சேந்தனார் அருளிச் செய்த திருமுறையில் பிரிதொரு பகுதியான **"திரு பல்லாண்டு"** பாட தேர் விரைவாக ஓடி நிலைக்கு வந்தது. இவ்வளவு சிறப்புகள் பெற்ற திருமுறைகளை நாமும் படித்து பயன் பெறுவோம். **– திரு M. சக்திவேல், கும்பகோணம்.**

ESTD : 1991

உ

ஸ்ரீ மங்கைநாயகர் தேனம்மை சுவாமிகள் துணை

நம் நகர பெருமக்களுக்கு நல்வாழ்த்துக்கள்

Off : 0461 - 2328501
Res : 0461 - 2328502
91711 70000

SARC

# ஸ்ரீ அலங்கார் ரெக்சின் சென்டர்

**Dealers in :**

**Rexine, Furniture and Furnishing Materials**

**ஒரு வருட உத்திரவாதத்துடன் தேக்கு மரக்கட்டில் - டபுள் மற்றும் மெத்தை ரூ. 15,100/- மட்டும்.**
**(தமிழகம் முழுவதும் டெலிவரி செய்யப்படும்).**

247-C/4, Palayamkottai Road, Near Old Bus-Stand, Tuticorin-628 002.
E-mail : alankarexine@gmail.com www.tuticorinalankarrexine.com

AB

# ஸ்ரீ அலங்கார் பில்டர்ஸ்

Structural Engineer ❖ Licensed Surveyor in Tuticorin City Municipal Corporation
❖ Panel Valuer in Tuticorin District Central Co.op. Bank Ltd.,

**கட்டிட வரைபடம், வடிவமைப்பு, முகப்புதோற்றம்,**
**கட்டிட மதிப்பீடு, வரைபட அனுமதி சான்று, வாஸ்து முறைப்படி கட்டிடங்கள்**
**சிறந்த முறையில் செய்து தரப்படும்.**

71-5, Balavinayagar Kovil Street, Upstairs Sri Alankar Rexine Centre,
Tuticorin- 628 002.
Email : tutyalankarbuilders@gmail.com www.tuticorinalankarrexine.com

நம் சமூக பணியில்...,

**அரு. சோம சண்முகநாதன்**
**S. சிவகாமி**
**S. சசிகுமார்** B.A.,DECM.,
**Er. S. பிரஹலாதன்** M.E.,
**பூதமங்கலமுருடையார், உலகம்பட்டி.**

**திருமூலரின் திருமந்திரத்தொடர் – 1**

# சிவ சிவ என்று கூறுங்கள்



சிவ சிவ என்கிலர் தீவினையாளர்.
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்.
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்.
சிவ சிவ என்றிட சிவகதி தானே

**–திருமூலரின் திருமந்திரம்**

**பொருள் :** பாவிகள், சிவன் (கடவுள்) நாமத்தை உச்சரிக்க மாட்டார்கள். பாவம் செய்தவர்களும் "சிவ சிவ" என்ற நாமத்தை உள்ளன்போடு உச்சரித்தால் பாவங்கள் போகும். சிவன் நாமத்தை உச்சரித்தால் மனிதனும் தேவர் ஆகிவிடுவான். தொடர்ந்து சிவன் நாமத்தை உச்சரிப்பவர்கள் சிவனுடன் ஒன்றிவிடுவார்கள்.

'சி' என்பது சிவத்தைக் குறிக்கும். 'வ' என்பது அவரின் அருட்சக்தியைக் (சக்தி) குறிக்கும். நாம் ஒரு செயலை செய்யும் பொழுதோ அல்லது செய்விக்கும் பொழுதோ, செயலற்ற தன்மையிலோ அல்லது ஆற்றலை வெளிப்படுத்தும் காலத்திலோ நாம் **"சிவ சிவ"** என்று கூறினால் அந்த காரியங்களின் கர்மவினை உயிர்களாகிய நம்மைப் பற்றாது. சிவசக்தி (சிவ) அதனை நீக்கி விடுவார்.

நம் வினை அறுந்தால் ஞானம் பிறக்கும்! ஞானம் அடைந்தால் மாயையின் விந்தை புலப்படும்! மாயையும், வினையும் இல்லையெனில் ஆணவமலம் நீங்கும்! இந்த மூன்று இல்லையெனில் அவ்வுயிர் முக்தி அடையும்! அதாவது சிவபெருமானிடத்தில் ஒன்றிணையும். அதனால் தான் "சிவ சிவ" என்று கூற வேண்டும் என்று திருமூலர் பாட்டின் மூலம் உணர்கின்றோம்.

**– அருள்நிதி தேவிகா ராஜவேலு, பொன்னமராவதி**

# உணவுக்கு மட்டுமா உப்பு...????



உப்பை உணவுக்கு மட்டும் தான் பயன்படுத்த வேண்டுமா என்ன?.... வேறுசில பயன்பாடுகளுக்கும் உப்பு பயன்படுத்தப்படுகிறது பற்றி தெரிந்து கொள்வோம்.

1. அரிசியில் சிறிது உப்புத் தூளைக் கலந்து வைத்து விட்டால் எத்தனை நாட்கள் சேமித்து வைத்திருந்தாலும் அது புதிதாகவும், புழு, பூச்சி பிடிக்காமலும் இருக்கும்.
2. பாதம் நனையும் அளவுக்கு ஒரு அகலமான பாத்திரத்தில், மிதமான சூட்டில், வென்னீர் எடுத்து, அதில் கல் உப்பு மற்றும் எலுமிச்சை சாறு கலந்து 10 நிமிடங்கள் பாதங்களை நீரில் வைக்க கால் வலி பறந்து போகும். இதைத் தொடர்ந்து செய்து வந்தால், கால்கள் மிருதுவாகவும், பளிச்சென்றும் இருக்கும்.
3. கேரட், பீட்ரூட் வாடிப் போனால் நறுக்குவது சிரமமாக இருக்கும். அவற்றை உப்பு கலந்த நீரில் சிறிது நேரம் போட்டு வைத்தால் புதிதுபோல் ஆகிவிடும்; நறுக்குவதும் எளிதாக இருக்கும்.
4. ஒரு பக்கெட் தண்ணீரில், ஒரு கப் உப்பு சேர்த்து அதில் ஜீன்ஸ் கால்சட்டையை ஊற வைத்து பின் துவைத்தால், கலர் மாறாமல் அப்படியே நீடித்திருக்கும். முதல்முறை மட்டுமல்ல, ஒவ்வொரு முறை துவைக்கும் முன்பும் இப்படி செய்யலாம்.
5. பண்டிகைக்கு செய்த பட்சணங்கள் மீதமிருந்தால், நீண்ட நாட்கள், அவை சிக்கு வாடை அடிக்காமல் இருக்க, ஒரு சிறிய துணியில் ஒரு கைப்பிடி கல் உப்பைப் போட்டு கட்டி, பட்சணங்கள் வைத்துள்ள பாத்திரத்தில், பட்சணத்திற்கு அடியில் போட்டு வைக்கவும்.
6. குத்துவிளக்கை, முதலில் பழைய செய்தித்தாளால் துடைத்து பின், புளி மற்றும் உப்பால் தேய்த்துக் கழுவினால் எண்ணெய் பிசுக்கு நீங்கி, விளக்கு பளிச்சென்று ஆகிவிடும்.
7. புடவைகளுக்கு அடிக்கும் பால்ஸ்களை, முதலில் உப்பு கலந்த நீரில் ஊற வைத்து, உலர வைத்து, பின் அயர்ன் செய்து தைத்தால், சாயமும் போகாது, ஓரமும் சுருங்காது.
8. சமையல் அறையில் பாத்திரங்கள் கழுவும் தொட்டியில் நீர் போகாமல் அடைத்துக் கொண்டிருக்கிறதா.. சிறிது கல் உப்பை, இரவில் போட்டு வையுங்கள், காலையில் நீர் அடைப்பு இருக்காது.

9. ப்ரிஜ்ஜில் இருக்கும் ப்ரிசரில் சிறிது கல் உப்பை தூவி வைத்தால் ஐஸ் கட்டி டிரேக்களை எளிதில் எடுக்கலாம்.
10. சட்டைக் காலர்களில் அழுக்கு படிந்திருந்தால், சிறிது பொடி உப்பை அழுக்கு உள்ள பகுதியில் பூசி, சிறிது நேரம் கழித்து பிரஷ்ஷில் தேய்த்தால் அழுக்கு நீங்கி விடும்.
11. இரும்புப் பொருட்களில் துருப்பிடித்திருந்தால் அவற்றின் மேல் உப்பு கொண்டு தேய்த்தால் பளபளப்பாகிவிடும்.
12. பட்டுத் துணிகளைத் துவைக்கும் போது நீரில் சிறிது உப்பைக் கலந்து கொண்டு அதில் துணிகளை அலச வேண்டும். பட்டுத் துணியின் மிருதுத் தன்மையும் நிறமும் மாறாமல் இருக்கும்.
13. வீட்டில் தரையைக் கழுவும் போது சிறிது உப்பை நீரில் கலந்து கழுவினால் தரை காய்ந்த பின்பு ஈக்கள் தரையில் மொய்க்காது.
14. சுத்தமான நெய்யில் ஒரு சிறு கரண்டி அளவு உப்பைக் போட்டு முழுவதையும் சூடுபடுத்தி வைத்தால் நெய் அதிக நாட்கள் கெட்டுப் போகாமல் இருக்கும்.
15. சமையல் பாத்திரங்களில் வெங்காய வாசனை போகாமல் இருந்தால், உப்பு கலந்த சுடு நீரில் அப்பாத்திரத்தைக் கழுவினால் அந்த வாசனை போய் விடும்.
16. துணியில் மைக்கறை அல்லது இரத்தக்கறை இருந்தால் அந்தக் கறையின் மேல் உப்பைத் தேய்த்துச் சுடுநீரில் அலசுங்கள் கறை அகன்று விடும்.
17. பாம்பு, பூரான் போன்ற வல்லூறுகள் வராமலிருக்க வீட்டைச் சுற்றி கல் உப்பினை முன்னோர்கள் தூவினார்கள்.
18. இறுதியாக உடலை புதைக்கும்போது கெடாமல் இருக்க உப்பை அதிக அளவில் போடுவார்கள்.
19. கடுகு எண்ணெயில் உப்பைக் கலந்து பல் துலக்கினால் பல் உறுதி பெறும்.
20. குக்கரின் அடியில் படிந்திருக்கும் கறையைப் போக்க, வெறும் குக்கரை அடுப்பில் வைத்துச் சூடேற்றுங்கள். பின்னர் உப்புத் தூளை உள்ளே போட்டு சிறிது நேரத்தில் இறக்கி அடிப்பாகத்தைச் சுத்தம் செய்தால் கறை இருக்காது.

**எனவே தான் அரிசி, பருப்பு, மஞ்சளுக்கு இணையாக உப்பையும் மகாலெட்சுமியாக போற்றுகின்றோம். நமது அன்றாட செயல்களில் அனைத்திலும் உப்பு இரண்டற கலந்துள்ளது என்பதை அறியலாம்.**


**– செ. ஆனந்த செல்வம், நங்கநல்லூர்.** சென்னை – 61.

# மதுரை அ.வ.ந. சங்க புதிய நிர்வாகிகள் 2021-24

மதுரை அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்க 27-வது ஆண்டு விழா, மூத்த உறுப்பினர் திரு C. அருணாசலம் அவர்கள் தலைமையில் 27-12-2020 நாளன்று ஹோட்டல் ஜான்ஸில், ஸ்ரீ கிரிஸ்வரி இறைவணக்கத்துடன் தொடங்கியது. சமீபத்தில் காலமான மதுரை சங்கத் தலைவர் M.M. தியாகராஜன் அவர்களுக்கும், செயலாளர் N.T. ராமமூர்த்தி அவர்களுக்கும் மலரஞ்சலியும், மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

சிறப்பு விருந்தினர்களாக கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு செ. ஆசை அலங்காரம் B.Sc., செயலாளர் திரு சுப. செல்வம், அ.வ.ந. பொதுநலச் சங்கத் தலைவர் Er. M. மாணிக்கம், செயலாளர் திரு S. இராமநாதன், அறங்காவலர் திரு N. மாணிக்கம் மற்றும் அமைப்புச் செயலாளர் V. நேருதாசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இவ்விழாவில் 2021-24 ஆண்டு காலத்திற்கு புதிய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்க தேர்தல் அலுவலர்களாக திரு Er. M. மாணிக்கம், திரு செ. ஆசைஅலங்காரம் B.Sc. அவர்களும் நியமிக்கப்பட்டு, முறைப்படி தேர்தல் அட்டவணை அறிவிக்கப்பட்டது. யாவரும் போட்டியிட முன்வராத நிலையில் ஏகமனதாக திரு சித.ந. சிதம்பரம் அவர்களை தலைவராகவும், திரு R.S. நடராஜ் அவர்களை செயலாளராகவும், திரு AR. சந்திரமோகன் அவர்களை பொருளாள ராகவும் தேர்தல் ஆணையர்களால் அறிவிக்கப்பட்டு, உடன் பதவிப் பிரமாண உறுதிமொழியையும் எடுத்துக் கொண்டார்கள்.



தலைவர்
**சித.ந. சிதம்பரம்**



செயலாளர்
**R.S. நடராஜ்**



பொருளாளர்
**AR. சந்திரமோகன்**

புதிதாக தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகளை பொதுக்குழு உறுப்பினர்களும், சிறப்பு விருந்தினர்களும் பாராட்டினார்கள்.

மதிய விருந்துடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

**தகவல் : திரு R.S. நடராஜ், செயலாளர், மதுரை.**

ஆன்மீகப் பகுதி

## திருத்தொண்டர் பெருமை

# நாயன்மார் நெஞ்சம்



திருமுறைத் திருப்பணித் தொண்டர், சைவப் புலவர் -
சிவகுரு வா.நா. சுந்தரம் எம்.ஏ., திருவையாறு

சித்தத்தை சிவன்பால் வைத்த சிவநேயச் செல்வர்களே! வணக்கம். அனைவருக்கும் திருவருள் கிட்டுவதாக.

திருநீலகண்டக் குயவனார், இயற்பகையார் பற்றி படித்திருப்பீர்கள். இருவரின் தொண்டின் தன்மையை உணர்ந்திருப்பீர்கள். இவர்களைப் போல் பக்தி செய்ய இயலுமா? சாத்தியமா? என்று இக்காலத்தில் வாழும் நம் போன்றோர்க்குத் தோன்றும். தோன்ற வேண்டும். தோன்றினால்தான் பக்தி செய்ய முயற்சிக்கிறோம் என்பேன் நான். கேள்வி பிறந்தால் தான் விடை கிடைக்கும். எனவே கேள்விகள் பிறக்கட்டும். அதற்குப் பதில் காண முயற்சிப்போம். ஏனெனில் இந்த இருவரின் வரலாறே நம் இதயத்தை ஒரு கலக்கு கலக்கி இருக்கிறது. இப்படியெல்லாம் பக்தி செய்தால் தான் இறைவன் அருளுவானா? இது போல் நம்மால் தொண்டு செய்ய, பக்தி செய்ய முடியுமா? என்று மலைப்பு வேண்டாம். இதை விடக் கடுமையாக, தனது குலக் கொழுந்தாகிய ஒரே மகனை சின்னஞ் சிறு பாலகனை; தாயார் பிடித்துக் கொள்ள தந்தையார் அறிந்து கொடுக்க, சமைத்து உணவாக்கி அடியாருக்கு பரிமாறிய வரலாறும் படிக்க இருக்கிறோம். இப்படியெல்லாம் பக்தி செய்யும் மனம் எப்படி அமைந்தது? அப்படி செய்யச் சொல்லி இறைவன் கேட்டானா? தூண்டினானா? அப்படிச் செய்தால் மட்டுமே வீடுபேறு தருவேன் என்று விளம்பினானா? குழப்பமாய் இருக்கிறதா? பக்தி செய்யப் பயம் வருகிறதா? பயம் வேண்டாம்! எளிதுதான்! எப்படி? பக்தி செய்ய வேண்டும் என்ற முனைப்பும், உரைப்பும் ஏற்பட்டு; எல்லாம் அவனே! **“வேண்டத் தக்கது, அறிவோய் நீ. வேண்ட, முழுதும், தருவோய் நீ!”** என்ற பக்குவம் மனதிற்குள் வந்து எல்லாம் ‘அவன் செயல்’ என்ற உணர்வு வரப்பெற்றால் மட்டுமே

இப்படி தொண்டு செய்வது எளிது. இத்தகைய மனம் பற்றி சிந்திப்போம் தெளிவு பெறுவோம்.

**'தொண்டர்'** என்ற சொல்லும், **'அடியார்'** என்ற சொல்லும் பொருளால் வேற்றுமை இல்லை. இன்றைய காலகட்டத்தில் ஒன்று கேலிக்குரியதாகவும், மற்றொன்று மரியாதைக் குரியதாகவும் அறியப்படுகிறது. 'அடியார்' என்ற சொல் ஒன்றினுக்கு 'அடிமைப்பட்டவர்' என்ற பொருளைத் தரும். கடவுளுக்கும், மனிதருக்கும் தொண்டு செய்பவர்களைத் 'தொண்டர் – அடியார்' என்று கூறுவது மரபாக உள்ளது. ஆனால் தன்னைப் போலவே பிணி மூப்பு, சாக்காடு குறை, நிறை உள்ள ஒரு நடிகரை, அரசியல்வாதியை, போலிச் சாமியாரை பின்பற்றி அவருக்குத் தொண்டர் நான்; என்போரைக் காணும் பொழுது 'தொண்டர்' என்ற சொல் கேலிக்குரியதாக கருதப்படுகிறது.

நமக்கு உய்வை நல்கக்கூடிய, பரிபூரணணாய் விளங்கும் பேரானந்தப் பெருங்கடலான இறைவனுக்குத் தொண்டு செய்யும் 'அடியாராய்' இருப்பவர்களே உண்மைத் தொண்டர்கள். பற்று அற்றவர்களையே 'அடியார்' என்று சொல்வர். பற்றினை அறுத்த ஒருவனே விடுதலை பெற, பயன்பெற, வீடுபேறு அடையத் தகுதி உடையவன் ஆவான். **நான்** என்ற அகங்காரமும் **எனது** என்ற மமகாரமும் அற்றவர்கள் அடியார்கள். இவ்இரண்டையும் அறுத்தலே **பற்றறுத்தல்** எனப்படும். **"அற்றது பற்றெனில் உற்றது வீடு"** ஆனால் இந்நிலை எய்துவது சுலபமல்ல; முயன்றால் முடியாததும் அல்ல. ஏனெனில் பலர் முடித்துக் காட்டி முன் மாதிரியாய் இருந்திருக்கிறார்கள். நம்முள்ளே வேறுபாடின்றி பின்னிக் கிடக்கின்ற, நான், எனது என்ற உணர்ச்சியினைப் போக்க, நம் முன்னோர்கள், மக்கள் சமுதாயம் பலவழிகளைக் கையாண்டு அனுபவம் பெற்றுள்ளது. இதை **'சமய அனுபவங்கள்'** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எளிதில் மடங்காத மனத்தை அடக்கியவர்களை நாம் **'அடியார்'** என்கிறோம். அவர்களின் மன அடக்கம் இறைவனை வணங்கும் வழியாகும். அப்படி 'அவனை' வணங்க வேண்டும் என்றாலும் அதற்கும் அவனுடைய

அருளாகிய கருணை வேண்டும். **"அவன் அருளாலே அவன் தாள் வணங்கி"** என்கிறார் **திருவாதவூரார்.**

அவனுடைய பேரருள் பெற்று, அவன் தாள் வணங்கும் பேறு பெற்றவர்களே, நாம் கொண்டாடும் **"அறுபத்து மூன்று நாயன்மார்"** ஆவர். 'நாயன்மார்கள்' என எழுதுதல் பிழை. 'நாயனார்' என்பது ஒருமை. 'நாயன்மார்' என்பதே பன்மைதான். இதற்கு மேலும் 'கள்' விகுதி சேர்த்து எழுதுவதை தவிர்க்கவும். இருக்கட்டும்; இறைவனை ஏன் இப்படி வணங்க வேண்டும் என்று தோன்றலாம். இதற்கு இரண்டு விதமான பதில்கள் கூறலாம். சாதாரண மக்களும், பாமரர்களும் இறைவனை வணங்குகிறார்கள். அடியார் பெருமக்களும் இறைவனை வணங்குகிறார்கள். இருவரின் வணக்கத்திலும் வேறுபாடு உள்ளது. 'மக்கள்' ஒரு பயன் கருதி வணங்குகிறார்கள். அடியார்கள் 'வணங்குவதற்காகவே' வணங்குகிறார்கள். மக்கள் வணக்கத்தை ஒரு கருவியாகக் கொண்டு அதனைப் பயன்படுத்தி, ஒரு பயனைப் பெற முயல்கிறார்கள். **"வானவர்கள் வாழ்த்துவதும் தாம் வாழ வேண்டி"** என்கிறது திருவாசகம். இந்தப் பயன் பொன் பொருள் மேலும் பிற என்று அமைகிறது. இந்தப் பயன்களின் நிலையாமையை உணர்ந்த மிக மிகச் சிலரோ அழியாத வீட்டின்பத்தை, முக்தியை, இறைவன் திருவடி நிழலை பெற மட்டுமே வணங்குகிறார்கள்.

இரண்டாவதாகக் கூறப்பட்ட அடியார்களின் தன்மையில் இருந்தும்கூட சில அடியார் விலகி நிற்கின்றார்கள். **பிறவி என்பது துன்பம் என்ற முடிவிற்கு வந்தவர்கள் மட்டுமே இப்பிறவியை விட்டு 'வீடுபேறு' பெற வேண்டும் என்று விரும்புகிறார்கள்.** இதிலிருந்தும் கூட சிலர் விலகி, பிறவியைத் துன்பம் தருவது என நினைக்காமல் இருப்பதோடு, மீண்டும் பிறவி வேண்டும் என்று ஒருபடி மேலே நின்று வேண்டிக் கொள்கின்றனர். இப்படி ஒரு மனம் அமைய என்ன காரணம். பிறவியின் பயனைப் பெறும் சரியான வழியை, உண்மை வழியை இவர்கள் அறிந்து கொண்டு விட்டதால் மீண்டும் பிறவி வேண்டும் என வேண்டுபவராய் இருக்கின்றனர். முதுகு அரிப்பைப் போக்க ஒரு கூரிய கத்தியைக் கொண்டு சொரிந்ததனால் துன்பம்

ஏற்பட்டபோது கத்தியின் குறை எனப் பேசுவது வேடிக்கையானது அல்லவா? அதுபோலப் பிறவியினால் கிடைக்கும் உண்மையான பயன் பற்றி அறியாதவர்கள் பிறவியை வேண்டாம் என்கிறார்கள். கத்தியைச் சரியான முறையில் சரியான வேலைக்கு மட்டும் பயன்படுத்தக் கற்றவருக்கு கத்தியால் ஒரு கெடுதலும் இல்லை. பிறவியின் பயனை அறிந்த, தமிழகத்தில் வாழ்ந்த அடியார்கள் பிறவியை வெறுக்காததோடு; அது மீண்டும் மீண்டும் வேண்டும் என்றே வேண்டி நின்றனர். பிறவியைப் புகழ்ந்து போற்றினார்கள்.

**"வந்த பிறவியை வணங்குவோம்,"**
**"மனிதப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே**
**மண்ணில் வந்த பிறவியே எமக்கு வாலிதாம் இன்பம்,"**
**"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்"**

என்பன போன்ற திருமுறை வரிகளைப் பிறவியை வெறுப்பவர்கள் பாடியிருப்பார்களா? எனச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

பிறவியை விரும்பக் காரணம்தான் என்ன? எனப் பார்ப்போம். உலகில் எல்லாப் பொருளுக்கும், செயலுக்கும் **'வழி'** என்றும் **'பயன்'** என்றும் இரண்டு பேசப்படுகிறது. பெரும்பாலானவர்கள் 'பயனைப்' பெறும் 'வழி'யைத் தேடினர். 'வழி'யும் வரும் 'பயனும்' ஒன்று என்று வேறு சிலர் ஒரு முடிவோடு இருந்தனர். பயனை அடைந்த பிறகும் கூட என்ன கிடைக்கும் என்று இருந்தவர்களுக்கு இடையே நம் **'அடியாராகிய நாயன்மார்'** அவை அனைத்தையும் 'வழி' யிலேயே பெற்றனர்.

ஆகவே 'முடிவு' அல்லது 'பயனை' அடைந்து ஆக வேண்டியது. பிறகு ஒன்றும் இல்லை என்று உணர்ந்து கொண்ட நிலையில் மற்ற அடியார்களிடமிருந்தும் விலகி; முடிவாகிய வீடு பேற்றினை அடைய அவனைக் **"கும்பிடுவதே வழி"** என்று அந்த அடியார்களிலிருந்தும் மேம்பட்ட சிந்தனையால் **'கும்பிடுதல்'** ஆகிய வழியே தனது பயன் அல்லது முடிவு என்ற கொள்கையினைக் கண்டறிந்து அதில் உறுதிப்பாட்டோடு இருந்து விளங்கினமையால் இத்துணை அரிய பெரிய செயற்கரிய செயல்களை எளிமையாகச் செய்து முடித்துக் காட்டினார்கள்.

சங்க நூல்களில் கூட இக்கருத்து பேசப்பட்டாலும் அவைகளைப் பின்பற்றியவர்கள், அவர்களின் செயல்கள் பற்றிய குறிப்பேதும் இல்லை. நாயன்மார் காலம் வரை கிடைக்கவும் இல்லை. நம் தமிழருக்கு, சிவத் தொண்டராய் விளங்கிய அடியாருக்கு இது கைவந்த கலையாக இருந்ததுதான் என்றாலும், நாயன்மார் மற்றும் ஆழ்வார் பெருமக்கள் காலத்தில் தான் இந்த சிறந்த கொள்கை வலுப்பெற்று கடைப்பிடிக்கப்பட்டது. அப்படிப்பட்ட உன்னத மனம் வாய்த்த பெருமக்களாகிய நம் நாயன்மார் பிறவியின் பயன் 'கும்பிடுதலே' என்பதனை

**வாழ்த்த வாயும், நினைக்க மட நெஞ்சும்**
**தாழ்த்த சென்னியும், தந்த தலைவனை...என்றும்**
**தலையே நீ வணங்காய்....**

என எடுத்து உறுப்புகளை வணங்கப் பாடிய வகையாலும் இந்தக் கருத்தையே கொண்டிருந்தனர் என்பது புலனாகிறது.

**அச்சுதா அமரர் ஏறே ஆயர் தம் கொழுந்தே என்றும்**
**இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்**
**அச்சுவை பெறினும் வேண்டேன்....**

என்று பாடிய **ஆழ்வார்** வாக்காலும் அறியலாம். **'கும்பிடுதலை'த் தவிர இப்பிறவிக்கு செய்யத்தக்கது எதுவுமே இல்லை** என வாழ்ந்த ஒரு கொள்கைக் கூட்டமே நாம் வணங்கும் அடியார்களாகிய 'நாயன்மார்' எனப் புரிந்து உணர்ந்து அனுபவிப்போமாக.

இத்தகைய கும்பிடும் கொள்கைக்கு இடையூராக இடர்ப்பாடாக எதுவரினும், எப்போது - எவ்விடத்து - எவர் மூலமாக வரினும் அதைக் களைய அவர்கள் சிறியதும் தயங்கியதே இல்லை. இடர் எவர் மூலம் வந்தாலும் கவலை இல்லை. **'சண்டீசுரர்'** வரலாறு இக்கருத்துக்கு அரண் சேர்ப்பதைக் காணலாம். தம்முடைய வணக்கத்திற்கு, வழிபாட்டிற்கு கும்பிடுதலுக்கு இடையூறு விளைவித்தவர் பெற்ற தகப்பனாகவே இருந்தும் சிறிதும் வருத்தம் கொள்ளாமல் காலை துண்டித்த செயலை என்னென்பது. இப்படித்தான் ஒவ்வொரு

நாயனாரும் தன்னுடைய குறிக்கோளுக்காகப் பலப்பல அருஞ்செயல்களை செய்தனர் என உணர்க.

இப்படியாக 'வழி'யையும் 'பயனை'யும் ஒன்றாகக் கண்டுணர்ந்து அனுபவித்து வாழ்ந்த அடியார்கள் தமிழ்நாட்டில் ஆங்காங்கே பல்லாண்டு காலமாகப் பரவி இருந்தனர். எல்லாத் தரப்பிலும் இக்கொள்கையுடையோர் விரவி இருந்தனர். அவர்களின் வாழ்க்கையினையும், குறிக்கோளையும், புரிந்த தொண்டினையும் கொள்கை உறுதியினையும் வகைப்படுத்தி; செல்வச் சிறப்பு மிக்க 'அரசன்' தொடங்கி 'ஆண்டி' ஈறாக சமூகத்தில் உயர்ந்த 'அந்தணரில்; ஆரம்பித்து 'புலையர்' வரை, எண்பது வயது 'முதியவர்' தொடங்கி, ஐந்து வயதுப் 'பாலகனை'யும் இணைத்து, 'ஆண் பெண்' என்ற **இன** பேதமின்றி 'இல்லறம்' மற்றும் துறவறத்தாரிலிருந்தும் தெரிவு செய்து, சிற்சில பேர்களையும், வெவ்வேறு தொண்டினையும் காட்டி நாம் வணங்கி வழிபட்டு வாழ பெரிய புராணமாக வழங்கியவர் சேக்கிழார் பெருமகனார். அவரின் தொண்டின் பயன் **பெரியபுராணம்** நாயன்மாரின் திறம் உயர்வு கொள்கை இன்னபிற சிறப்புகள் பற்றி சேக்கிழார் **"திருக்கூட்டத்தார் சிறப்பு"** என்ற பகுதியில் மிகத் தெளிவாகப் பதிவு செய்துள்ளதைப் படித்தறியலாம்.

**கேடும் ஆக்கமும், கெட்ட திருவினார்.,**
**ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்.,**
**கூடும் அன்பினில், கும்பிடலே அன்றி**
**வீடும் வேண்டா, விறவின் விளங்கினார்.**

**ஆரம் கண்டிகை, ஆடையும் கந்தையே,**
**பாரம் ஈசன்பணி, அலது ஒன்றிலார்.,**
**ஈர அன்பினர், யாதும் குறைவிலார்,**
**வீரம் என்னால், விளம்பும் தகையதோ!**

திருநாவுக்கரசர் உழவாரப்பணி செய்யும் போது கிடைத்த நவமணிகளை எல்லாம் கல்லோடும், மண்ணோடும் சேர்த்து வீசி எறிந்தார் என படிக்கிறோம். மண்ணால் ஆன ஓட்டையும்

பொன்னையும் எந்த வேறுபாடும் காணாமல் இருக்கும் உள்ளம் மனம் எத்தகையது. இது எப்படி அமைந்தது, எங்கிருந்து பெற்றனர். இந்த உள்ளம் வாய்ப்பது எவ்வளவு பெரிய தவம், பேறு. செல்வத்தை, பொன்னை மதிக்காது இருந்தாலும், வேறு ஒன்றிலாவது பற்று இருக்க வேண்டாமா? உலகியல் செல்வம் வேண்டாம் என்றதோடு அருளியல் செல்வமாகிய அழிவில்லாத ஆனந்தப் பேரின்பமான வீடு பேறாகிய கிடைத்ததற்கு அரிய மிகப்பெரும் **"இறை இன்பத்தை"**யும் கூட வேண்டாம் எனும் உள்ளம் படைத்தவர்கள் என்கிறார் நம் குன்றை முனி, "வீடும் வேண்டா விறல்" எனப் பெருமிதம் பேசுகிறாரே! ஏன்? வீடு பேறைக் கூட இவர்கள் விரும்பாததற்கான காரணம் இரண்டு. **'கும்பிடுதல்'** என்ற வழியைத்தவிர அதன் பயனாகிய வீடுபேற்றை விரும்புவதில்லை என்பது ஒன்று; மற்றொரு காரணம் வீடு பேறாகிய பயனை விரும்புவது கூட ஒரு பற்று ஆசை; அந்த ஆசை உயர்ந்தது தான் என்றாலும் கூட; **ஆசைப்படுபவன் அடியார் ஆக முடியாது** என்பதால், வேண்டாம் என்றார்களாம். **"ஆசை அறுமின், ஆசை அறுமின், ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்"** என்கிறார் திருமூலர்.

ஆகையால் நம் அடியார்கள் வீடு பேற்றைக் கூட விரும்புவதில்லையாம். இப்படியாக இவர்கள் வாழ்வதால் இவர்களுக்கு குறை ஏதும் உண்டோ? என்றால் அதுவும் இல்லையாம். **"ஈர அன்பினால் யாதும் குறைவிலார்"** என்கிறார். 'ஈர அன்பினர்' என்ற சொல்லை நன்கு ஆய்ந்து அறிந்து உணர்க.

இப்பேர்பட்ட வாழ்வை மேற்கொள்ள இவர்களால் எப்படி முடிந்தது. 'பக்தி வழி' என்ற ஒன்றை உறுதியாகப் பற்றிக் கொண்டதால் முடிந்தது. 'பக்தி' என்றால் 'அன்பு'. நம்மால் அன்பு செய்யப்படுபவர் நம் அருகில், பக்கத்தில் இருப்பதையே விரும்புவோம். இந்த மனநிலைதான் இவர்களிடம் காணப்படுகிறது. கடவுளைக் கடந்த பொருளாக இவர்கள் காணவில்லை. **'அன்பு எனும் பிடியில் அகப்படும் மலை'** எனக் கண்டனர். 'அன்பு வலையில் அகப்படும் அவனை' ஓயாது கண்டு இன்புற்று செம்மாந்து இருந்தனர். அறிவால் தேடி

அடைய முடியாத அவனை அன்பால் தேடிக் கொண்டனர். அன்பின் துணையால் அடைந்த அப்பொருளை, பயனை, அதாவது பரம்பொருளை தங்கள் பக்கத்திலே வைத்துக் கொள்ள விரும்பினர். அப்பொருளை பயனாகவும், அடையும் அன்பை வழியாகவும் இவர்கள் வேறுவேறாகக் கருதவில்லை; ஏனென்றால் 'அவன் வேறு, அன்பு வேறு' எனக் கருதினாரென்றோ ஆராயத் தோன்றும்.

**அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்**

**அன்பே சிவமாவது யாரும் அறிகிலார் – திருமந்திரம் 270**

இந்த பேருண்மையைப் புரிந்து, அறிந்து, உள் வாங்கிக் கொண்டவர்களே நாம் படித்து அறிய இருக்கும் அடியார்கள். இவர்கள் கடைப்பிடித்தது பக்தி மார்க்கம். இப்படிப்பட்ட உயர்ந்த பக்தி மார்க்க நெறியில் ஒழுகிய காரணத்தால், உலக இயல்பு–நடைமுறை மற்றவர்களின் ஏச்சு, பேச்சு, ஏளனம், கவலை, பாராட்டு, வருத்தம் என்ற எந்த ஒரு பாதிப்பும் இன்றி; தமது பக்தி செலுத்துதலாகிய "இறையைக் கும்பிடுதல்" என்ற கொள்கையை நிலைநாட்ட எந்த உச்சத்திற்கும் சென்று 'பக்தி' செய்தனர். இப்படி உயர்வான பக்தி மார்க்கத்தை கடைப்பிடித்தவர்கள் ஆற்றிய தொண்டை, அதன் தன்மையினை உலகறியச் செய்யவும்; ஆன்மாவாகிய 'உயிர்' எந்த நிலையில் நின்றாலும் அது செய்ததற்கான பலனைத் தரவேண்டிய பொறுப்பும், கடப்பாடும் இறைவனுக்கு இருப்பதால் "**எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும், மண்ணிய சீர் சங்கரன் தாள் மறவாத சிந்தையார்க்கு** அடியார் பெருமக்களுக்கு நிலைத்த பெரும் பேறாகிய அவனது திருவடிக்கீழ் இருக்கும் பேற்றினை எம்மிறை தானே வழிய வந்து வழங்குகிறான்" என்ற தத்துவத்தை புரிந்து கொள்வது சிறப்பு. "இதனை**யே சேக்கிழார்**" **"செய்வினையும் செய்வானும் அதன் பயனும் சேர்ப்பானும்"** என்று அருளியுள்ளார்.

**சேர்ப்பான்** ஆகிய **இறைவன்** வீடுபேறு அருளுகிறான் இப்பேர்பட்ட பக்தி நலம் மிக்க தொண்டர்களைப் பாடும்படி சுந்தரரிடம் கூறிய இறைவன் அவர்களின் சிறப்பினை

கூறுவதாக, இறைவன் கூற்றாகச் சேக்கிழார் பாடியுள்ளதைக் காண்க.

**பெருமையால் நம்மை ஒப்பார்; பேணலால் எம்மைப் பெற்றார்,**
**ஒருமையால் உலகை வெல்வார்; வானமேல் ஒன்றும் இல்லார்,**
**அருமையாம் நிலையில் நின்றார்; அன்பினால் இன்பம் ஆர்வார்;**
**இருமையும் கடந்து நின்றார் இவரை நீ அடைவாய்....**

(பெரியபுராணம்-196)

'தனக்கு ஒப்பானவர்' என்று கூறுகிறார். இத்தகைய தொண்டர்களின் பெருமையை நம் தமிழ் மூதாட்டி ஔவையாரும்..... **இறைவரோ தொண்டர்தம் உள்ளத்து ஒடுக்கம் தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே!** என வியந்து பாராட்டி பாடியுள்ளதை அறிந்து இன்புறுவோம்

இத்துணை உயர்வும் சிறப்பும் மிக்க அடியார் பெருமக்களின் தொண்டுநலம் பற்றி படித்து அறிவதே பெரும் பாக்கியம் புண்ணியம். அவர்களின் தொண்டுகளில் நம்மால் முடிந்ததைச் செய்ய முயல்வோம்.

இந்த **அறுபத்து மூவரில்** நம்மவர்கள் அதாவது வணிகர் குலப் பெருமக்கள் ஐவர் உண்டு. **முறைமையால் வணிகர் ஐவர்,** **"**காரைக்காலம்மை (புனிதவதி), மூர்த்தி, கலிக்கம்பர், அமர்நீதி, இயற்பகையார்." இவர்களின் திருப்பெயர்களை நம் குழந்தைகளுக்கு இட்டு நாள்தோறும் அழைப்பதன் மூலம், நம் நாக்கை புனிதப்படுத்திக் கொள்வோமாக. அடியார்களின் திருப்பெயர்களை மட்டுமே சொல்லிக் கொண்டிருந்த அப்பூதி அடிகள் (திருநாவுக்கரசர்) பெருமிழலைக் குறும்பர் (நம்பி அரூரர்) இவர்களைப் போல் நாமும் திருப்பெயர்களை உச்சரித்து நற்கதி பெறுவோமாக.

இந்த அடிப்படையில் திருத்தொண்டர்களது வரலாற்றை தொடர்ந்து பார்ப்போம். அடுத்த இதழில் நாம் "இளையான்குடி மாறனார்" வரலாற்றை தொடர்வோமாக.

# கல்வி வளர்ச்சிக் கழகத்தின் 39–வது ஆண்டு விழா அறிவிப்பு

**வரும் 31-01-2021 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் பிரான்மலை மங்கைநாயகர் மன்றத்தில் கல்வி வளர்ச்சிக் கழத்தின் 39-வது ஆண்டு விழாவும், மாணவர்களின் பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளது.**

முழு விவரங்களுக்கு அழைப்பிதழ் விரைவில் அனுப்புகிறோம். அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

**சுப. செல்வம்,**
செயலாளர், கல்வி வளர்ச்சிக் கழகம்

வாழ்க வையகம்! உ வாழ்க வளமுடன்!!

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**

மக்கள் நோயற்ற வாழ்வு வாழவும், நோய் வந்தால் விரைவாக குணம் பெற்று நலமுடன் வாழவும் வாழ்த்துகிறோம்.

## ஸ்ரீஅம்பாள் மெடிக்கல்ஸ்
பஸ் ஸ்டாண்டு முன்புறம், பொன்னமராவதி - 622 407.

**லயன் மு. வையாபுரி ராஜ்குமார். செல் : 98426 50806**

## ஸ்ரீஅம்பாள் மெடிக்கல்ஸ்
127, முருகன் காம்ப்ளக்ஸ், கோவைபுதூர், கோவை - 641 042.

**மு. கார்த்திக் D.Pharm., செல் : 98426 50506**

## நியூ ஸ்ரீஅம்பாள் மெடிக்கல்ஸ்
அம்பேத்கார் சதுக்கம், அறிவொளி நகர், கோவை - 641 042.

**T. அரசு ராமனாதன் MCA., செல் : 98422 44497**

**Prop. வை. முத்துராமன்,** பொன்னமராவதி - 622 407.

வாழ்க வளமுடன் மங்கைபாகர் – தேனம்மை துணை வாழ்க நலமுடன்




**Rtn.PHF.Er.M.SETHURAMAN** B.E., MBA., NEBOSH (Dubai-UAE)
IOSH, DSM, DIFSM, MD (Acu), D.Astro, Ex.TNSTC.Ltd.

**S.SHANTHI** B.Com.,
**S.VIJAY** B.E., ABUDHABI, UAE

**CELL : 81223 80075**

www.vijayguesthouse.com






- DELUXE AC ரூம்கள்
- AC ரூம்கள்
- NON AC ரூம்கள்
- பெரிய HALL வசதி
- 24 Hrs WIFI இன்டர்நெட் வசதி
- ஒவ்வொரு ரூமிலும் TV வசதி
- ATTACHED BATHROOMS
- WESTERN TOILETS



# VIJAY GUEST HOUSE
## (LODGE)
**NEAR BUS STAND, MANAPPARAI.**

குறைவான கட்டணத்தில், நிறைவான வசதிகளுடன்
**தரமான தங்கும் விடுதி**

சொக்கம்பட்டி **ந. கணேசமூர்த்தி-மஞ்சுளா,** விழுப்புரப்

இவர்களின் **இல்லத்**

மணமக்கள்:

**க. இளையராஜா**
**M.A., M.Sc., B.Ed.,**

**சி. செண்பகவள்ளி (எ) ஆர்த்திகா B.Sc., LLB.,**









மணநாள்:

**18-10-2020** ஞாயிற்றுக்கிழமை

இடம்:

ஸ்ரீ காமாட்சி அம்மன் – ஏகாம்பரநாதர் ஆலயம், சொக்கம்பட்டி

தெய்வத்திரு **சு. சிவலிங்கம்** – நலமுடன் **அன்புமலர்**

# திருமண விழா













எங்கள் இல்லத் திருமண விழாவிற்கு வருகை தந்து நல்லாசி வழங்கிய அனைவருக்கும் எங்களின் மனமார்ந்த நன்றிகள்.

**ந. கணேசமூர்த்தி – மஞ்சுளா,** ஸ்ரீ அம்மன் ஸ்டோர், சொக்கம்பட்டி.

தெய்வத்திரு **சு. சிவலிங்கம்** – நலமுடன் **அன்புமலர்,** விழுப்புரம்.

**சி. அருண்** B.E., (M.B.A.,) - Johnson & Johnson Pvt. Ltd., (Calicut)



பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்

- *திருவள்ளுவம்*

## நல்வாழ்த்துகளுடன்...

### DEEPA ERECTORS PRIVATE LIMITED

No. 16/5, 1st Main Road, Ramakrishna Nagar,
Ernavoor, Chennai - 600057
mail to : depl@depltd.in

### PHOENIX OILFIELD SERVICES & CONTRACTING LLC

P.O. BOX: 1151, WADI KABIR P.C. 117,
Sultanate of Oman.

*Specialists in :*

**Construction of Storage Tanks, Pressure Vessels, Pipelines and Blasting & Painting in India & Overseas**







R. Paramasivam B.E.,
***Managing Director***
Ph.: 9884660379

Pa. Mathivanan B.E.,
***Chief Executive Officer***
& A. Nivetha B.E., M.B.A.,
***Business Analyst***

Pa. Shankar B.E., M.S.,
(Sweden)
***Consultant***

# திருமண நல்வாழ்த்துக்கள்



நகரத்தார்கள் அதிகம் வாழும் ஊர்களில் ஒன்றான சொக்கம்பட்டியில் வாழ்ந்த தெய்வத்திருவாளர்கள் ந. நல்லசின்னான் செட்டியார் - வெள்ளையம்மாள் ஆச்சி இவர்களின் இளைய மகனான திரு ந. கணேசமூர்த்தி செட்டியார் தன் சொந்த அக்காள் தெய்வத்திரு ஜோதிமணி ஆச்சி - நலமுடன் சொக்கலிங்கம் செட்டியார் இவர்களின் மகள் மஞ்சுளாவை மணந்து சொக்கம்பட்டியில் சிறப்பாக வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் சொக்கம்பட்டியில் கடந்த 35 ஆண்டுகளாக ஸ்ரீ அம்மன் ஸ்டோர் என்ற மளிகை நிறுவனத்தை சிறப்பாக நடத்தி வருகின்றார்கள்.

திரு ந. கணேசமூர்த்தி செட்டியார் - மஞ்சுளா ஆச்சி இவர்கள் மகன்களின் மூத்தவரான திரு பாண்டியராஜன் அவர்களுக்கு பொன்னமராவதி திரு ப. ராஜமாணிக்கம் செட்டியார் - செல்வி ஆச்சி இவர்களின் இளைய மகள் கார்த்திகாவை மணந்து தீபலோகேஷ், மதிவதனா என்ற இரு குழந்தைச் செல்வங்களுடன் சிறப்பாக வாழ்ந்து வருகின்றார்கள். திரு பாண்டியராஜன் தனது தந்தைக்கு உறுதுணையாக இருந்து ஸ்ரீ அம்மன் ஸ்டோர் வணிகத்தை நடத்தி வருகின்றார்கள்.

இளைய மகன் இளையராஜா தன் பட்டப் படிப்பை நன்கு முடித்து தற்போது Axis Bank மதுரை மேலூர் கிளையில் பணிபுரிந்து வருகின்றார். இவருக்கு விழுப்புரம் தெய்வத்திரு சு. சிவலிங்கம் செட்டியார் - நலமுடன் அன்புமலர் ஆச்சி இவர்களின் மகள் செல்வி செண்பகவள்ளி (எ) ஆர்த்திகாவை 18-10-2020 அன்று சொக்கம்பட்டி ஸ்ரீ காமாட்சி அம்மன் - ஏகாம்பரநாதர் ஆலயத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மணமகள் ஆர்த்திகா சட்டப்படிப்பை முடித்தவர் ஆவார்.

மணமக்கள் **திருநிறைச் செல்வன் இளையராஜா - திருநிறைச் செல்வி ஆர்த்திகா** இவர்கள் இல்லற வாழ்வில் 16 செல்வங்களும் பெற்று ஆனந்தமாகவும், இனிமையாகவும் பல்லாண்டு வாழ்வதற்கு எல்லாம் வல்ல நமது குலதெய்வம் பிரான்மலை அருள்மிகு ஸ்ரீ மங்கைபாகர்-தேனம்மை அருள்புரிய அன்புடன் வேண்டுகிறோம்.

**- தலைவர், கல்வி வளர்ச்சிக் கழகம்**

# கல்விக் காவலர்கள்

1. **மே 2004 : முதல் கல்விக் காவலர், ஆமலூருடையார், தெய்வத்திரு. வெ.ராம. சுப்பிரமணியன் செட்டியார் – அன்னபூரணி ஆச்சி அவர்கள், அம்மன் குறிச்சி, சென்னை.**
2. ஜூலை 2004 : மேலூருடையார், **திரு. தே.மா. பழனிச்சாமி செட்டியார் – திருமதி. சரஸ்வதி ஆச்சி** அவர்கள், பொன்னமராவதி.
3. செப்டம்பர் 2006 : கழனிவாசலூருடையார் **திரு.நா. சுப்பிரமணியன்** BSc., CAIIB **திருமதி. தமிழ்ச்செல்வி** B.Lit., அவர்கள், கல்லம்பட்டி, சென்னை.
4. **மார்ச் 2007 : நாவலூருடையார், திரு. ச. கனகசபை B.E., மனோரஞ்சிதம்** அவர்கள், உலகம்பட்டி, திருச்சி.
5. ஜூலை 2007 : கழுகக்கூருடையார், **தெய்வத்திரு. இராம. வேலாயுதம் செட்டியார் – பார்வதி ஆச்சி** அவர்கள், படமிஞ்சி, சென்னை.
6. நவம்பர் 2007 : கழனிவாசலூருடையார், **தெய்வத்திரு. மு.சி.கி. நாராயணன் செட்டியார் – இராஜமாணிக்கம் ஆச்சி** அவர்கள்,கல்லம்பட்டி.
7. மே 2010 : சிக்கலூருடையார், **தெய்வத்திரு. நல்லாசிரியர் மெ. இளங்கோ – சாவித்திரி** அவர்கள். வா.புதூர்.
8. ஜூலை 2011 : அரும்பாக்கிளையார். திரு. **M.M. தியாகராஜன் B.Sc., தெய்வத் திருமதி. ஜோதிமணி** அவர்கள் புழுதிப்பட்டி. மதுரை.
9. ஜனவரி 2012 : பொன்னமராவதி பூண்டிலூருடையார். தெய்வத்திரு. மா. தங்கராஜன் – அழகுமீனாள் அவர்கள், புழுதிபட்டி பெங்களூரு.
10. மார்ச் 2012 : கழுகக்கூருடையார். **தெய்வத்திரு. மு.ஆ. இராமசாமி செட்டியார். தெய்வத்திருமதி. இராஜாமணி ஆச்சி,** சொக்கம்பட்டி.
11. மே 2012 : நாவலூருடையார், **திரு. ச. சொக்கலிங்கம் செட்டியார் – தெய்வத்திருமதி. தனபாக்கியம் ஆச்சி** அவர்கள் உலகம்பட்டி.
12. **ஜூலை 2012 : கழனிவாசலூருடையார். திரு. P.L. இராமஜெயம், பத்மாவதி அவர்கள், பொன்னமராவதி.**
13. செப்படம்பர் 2012 : கழுகக்கூருடையார். **தெய்வத்திரு.** M.S.M. **மாணிக்கம் செட்டியார் – சரஸ்வதி ஆச்சி** அவர்கள், பொன்னமராவதி.
14. **நவம்பர் 2012 : பணப்பாக்குழூருடையார். தெய்வத்திரு. கு. சொக்கலிங்கம் செட்டியார் - சொ. தேனம்மாள் ஆச்சி, செம்பூதி.**
15. மார்ச் 2013 - அரும்பாக்கிளையார், **தெய்வத்திரு. இராம. கதிரேசன் செட்டியார். திருமதி.முத்துலெட்சுமி ஆச்சி,** புழுதிப்பட்டி.
16. **மே 2013 : மேலூருடையார். தெய்வத்திரு. தே.மா. நாராயணன் செட்டியார் – சண்முகவள்ளி ஆச்சி,** பொன்னமராவதி.
17. ஜூலை 2013 : பூதமங்கலமூருடையார். **திரு. ச. இராமலிங்கம் – இராஜமாணிக்கம்,** அயனாவரம். சென்னை.
18. நவம்பர் 2013 : ஆமலூருடையார். **திரு. வெ.இராம.சுப. துரைராசு செட்டியார் – மீனாட்சி ஆச்சி,** அம்மன்குறிச்சி, சென்னை

19. ஜனவரி 2014 : நாவலூருடையார். **தெய்வத்திரு. அரு. வேலாயுதம் செட்டியார் – சம்பூர்ணம் ஆச்சி,** பொய்யாமணிப்பட்டி.

**20. மார்ச் 2014 : பூதமங்கலமுருடையார். திரு. R. பரமசிவம் B.E., தெய்வத்திருமதி. சிவகாம சுந்தரி, பொன்னமராவதி, சென்னை.**

**21. ஜனவரி 2015 : பூதமங்கலமுருடையார். திரு. அ.சொ. சண்முகம் செட்டியார் – ஜெயபாரதி ஆச்சி, அம்மன்குறிச்சி, திருச்சி.**

**22. மார்ச் 2015 : அரும்பாக்கிளையார். திரு. A.P. ஜெயபால் – புவனேஸ்வரி, பொன்னமராவதி, ஈராடு.**

23. ஏப்ரல் 2015 : கழுகக்கூருடையார், **தெய்வத்திரு. ம.வெ. நாராயணன் செட்டியார் – மீனாட்சி ஆச்சி** உலகம்பட்டி.

24. ஏப்ரல் 2015 : நாவலூருடையார். **திரு. சித. நடராஜன் செட்டியார், தெய்வத்திருமதி. இராஜம்மாள் ஆச்சி,** பொய்யாமணிப்பட்டி.

25. மே 2015 : நாவலூருடையார். **திரு. அரு.வே. மாணிக்கவேலு – சரஸ்வதி,** பொன்னமராவதி.

**26. ஜுலை 2015 : ஆமலூருடையார். திரு. வெ.இராம.சுப. செல்வம் B.Sc., ACA., – ஆனந்தம் ஆச்சி, அம்மன்குறிச்சி, சென்னை.**

27. ஜனவரி 2016 : அரும்பாக்கிளையார், தெய்வத்திரு. **மங்கைபாகன் செட்டியார் – சிகப்பி ஆச்சி,** புழுதிப்பட்டி.

28. மே 2016 : கழுகக்கூருடையார், **திரு. சி.சொ.மு. இராமையா செட்டியார் – தெய்வத்திருமதி. ஜெகநாதம் ஆச்சி,** கொன்னைப்பட்டி, தேனி.

29. செப்டம்பர் 2017 : ஆமலூருடையார். **திரு. வெ.இராம.சுப. நேசமணி செட்டியார் – அருள்நிதி புவனேஸ்வரி ஆச்சி,** அம்மன்குறிச்சி, சென்னை.

30. ஜனவரி 2018 : பணப்பாக்கூருடையார் **தெய்வத்திரு. சுப. மணிவாசகம் செட்டியார் – தேன்மொழி ஆச்சி,** காரைக்குடி.

31. செப்டம்பர் 2018 : கழுகக்கூருடையார் **திரு. சோம. கதிரேசன் செட்டியார் – தவமணி ஆச்சி,** பொன்னமராவதி, தொட்டாம்பாளையம்.

32. ஜுலை 2019 : அரும்பாக்கிளையார் **திரு. பொன். சிவஞானம் செட்டியார் – ராஜகுமாரி ஆச்சி,** சிறுகுடி.

**33. ஆகஸ்ட் 2019 : நாவலூருடையார் தெய்வத்திரு. சித. மாணிக்கம் செட்டியார் – அழகுமீனாள் ஆச்சி, பொய்யாமணிப்பட்டி.**

**34. ஆகஸ்ட் 2019 : வரதலூருடையார் ந. செல்வம் செட்டியார் – சிவயோகம் ஆச்சி, புழுதிபட்டி / கோவை.**

**35. ஜனவரி 2020 : பழனி ஆதிசைவ அன்னதான மடம் – அருள்மிகு பழனி ஆண்டவர் அறக்கட்டளை, பழனி.**

36. மார்ச் 2020 : மேலுருடையார் **தெய்வத்திரு. செ.பெ.அ. அலங்காரம் செட்டியார் – திருமதி. செம்பாயி ஆச்சி,** சிறுகுடி.

**37. அக்டோபர் 2020 :** பொன்னமராவதி பூண்டிலூருடையார் **திரு. வெள்ளச்சாமி செட்டியார் – திருமதி. சாந்தி ஆச்சி,** சிறுகுடி / கோவை.

# வாசகர் குரல்



**வாசகர் குரல்: 149-4**

நமது மங்கைபாகர் திருமண இலவச சேவைக்கு கொரோனா கால நெருக்கடியில் உதவ வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் கோவை திரு சே. சண்முகநாதன் செட்டியார் அவர்களும், திரு ச. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களும் இணைந்து 17-09-2020 அன்று எனது கைபேசிக்கு ஒரு வருடத்திற்கு உண்டான ரூ. 1498/-ஐ ரீசார்ஜ் செய்து கொடுத்தமைக்கு இருவருக்கும் நன்றி கூறி **பல்லாண்டு வாழ்க** என வாழ்த்துகிறேன். சேரிடம் அறிந்து சேர் என்ற நீதிநூலின் படி சேரத்தக்கவர்களை நன்கு அறிந்து சேர்க்க வேண்டும் என்ற கருத்தைப் புரிந்து கொண்டு இவர்களின் உதவியை ஏற்றுக் கொள்கிறேன். **– சமூகப்பணியில் பி.எல்.ஆர். கோவை.**

**வாசகர் குரல் : 150-1**

குரல் ஆசிரியர் சுப. செல்வம் அவர்களுக்கு பாராட்டுக்கள். ஓய்வு பற்றியும், நாம் ஓய்வு பெறுவது ஆண்டவனால் கொடுக்கப்படும் வரம் - இல்லையானால் நாம் ஓய்வு பெற மாட்டோம். செல்வத்தைப் பற்றி எவ்வாறு செலவழிப்பதும், யார் யாருக்கு கொடுப்பதும், சம்பாதித்த பணத்தை பயன்படும் வகையில் கருத்து கூறி இருக்கிறீர்கள். வரவேற்க வேண்டியது. விட்டுப்போன நண்பர்களை சந்தித்து மகிழ்ச்சி அடையுங்கள். நமது சொந்தம், பந்தங்கள் வீட்டு விஷேங்களுக்குச் சென்று உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ளவும். வெளியூர் பேரன், பேத்திகளையும், அண்ணன், தம்பி, பிள்ளைகளையும் பேசி மகிழ்ந்து நட்பை வளர்த்துக் கொள்ளுங்கள்.

முக்கியமாக தெரியாதவர் வந்தால் கதவைத் திறக்காதீர்கள். டாய்லட், குளியல் அறை கதவை பூட்டாதீர்கள்; மருந்துகளை, சரிவர, விடாமல் வேளா வேளைக்கு சாப்பிட்டு, உடம்பை பார்த்துக் கொள்ளுங்கள்; கடைசி காலத்தில் மன உளைச்சல் இல்லாமல், எந்தவிதமான கவலைகள் இல்லாமல், டென்சன் இல்லாமல், பேரன் பேத்திகளோடு, சந்தோஷம் மட்டும் நினைத்து, சந்தோஷமாக வாழுங்கள் என்ற கருத்தை தெரிந்தவர்களுக்கும், தெரியாதவர்களுக்கும் சிந்தனை செய்யுமாறு செய்த குரல் ஆசிரியர் அவர்களைப் பாராட்டி மகிழ்கிறேன்.

**– திரு பெ. சிவன்ஜோதி, தலைவர், அ.வ.ந. சங்கம், தஞ்சை.**

**வாசகர் குரல் : 150-2**

பணியில் இருந்து ஓய்வு பெற்றவர் - ஓய்வு என்று கட்டுரையை அனுபவித்து எழுதியவர். ஆனால் இன்று ஓய்வில்லாமல் நமது சங்கத்திற்கும், குரலுக்கும் முழு நேரமும் ஓய்வின்றி உழைத்து வருகின்றார்கள் எங்கள் மாமா திரு சுப. செல்வம் அவர்கள். **- K. மகா கண்ணன், பொன்னமராவதி.**

**வாசகர் குரல் : 150-3**

ஆஹா காலம் தான் எவ்வளவு வேகமாக சுழல்கிறது. இருபத்தைந்து ஆண்டுகள் நொடியில் பறந்துவிட்டது. குரல் பதிப்பு வெளிவந்து முன்னூறு மாதங்கள் ஆகிறது என்பதை நம்ப முடியவில்லை! நூற்றைம்பதாவது இதழ் சிறப்பாக உள்ளது. இத்தனை வருடங்கள் குரல் வளர்ச்சிக்காக அயராது உழைத்த நகரத்தார் பெருமக்கள் அனைவருக்கும் வணக்கத்தையும், நன்றியையும் சமர்ப்பிக்கிறேன். திருத்தொண்டர் பெருமை, கழக செயலாற்றல், மௌனத்தின் மொழி ஆகியவை சிறப்பாக உள்ளது. **- கோபி கோபிநாத்**

**வாசகர் குரல் ; 150-4**

நமது சிவகுருவாம் திரு வா. நா. சுந்தரம் அண்ணன் அவர்கள் திருத்தொண்டர் பெருமை விளக்கம் ஒவ்வொரு இதழிலும் மிகச் சிறப்பாக - அருமையாக நாம் அனைவரும் எளிதாக புரிந்து கொள்ளும்படி எழுதி வருகிறார்கள். நவம்பர் 2020 இதழில் சுந்தரரைப் பற்றியும், (என்னப்பன் அம்பலத்தான் ஆனந்த நடராஜரையும்) திருநீலகண்டர், இயற்பகையனார், சேக்கிழார் பெரிய புராணம் என்னப்பன்.... பற்றியும் பின்னிப் பிணைந்து கதையாகவும், கட்டுரையாகவும், கருத்தாகவும், தேன் சொட்ட சொட்ட, அமிழ்தம் வடிய, சுவைபட எழுதி வருவதால் சிவகுருவை சுந்தரராகவே எண்ணத் தூண்டுகிறது. சிவகுரு அவர்களை எப்படி பாராட்டுவது என்றே எனக்குத் தெரியவில்லை. ஒவ்வொரு கட்டுரையையும் இளமை... இனிமை.. புதுமையாக எழுதி வருகின்றார்கள்.

திருத்தொண்டர் பெருமைத் தொடரை எழுதி வரும் அண்ணன் சைவப் புலவர், சிவகுரு திரு வா.நா. சுந்தரம் அவர்களை வாழ்க பல்லாண்டு என்று மனமார வாழ்த்துகிறேன். மேலும் அவர்களை 63 நாயன்மார் வரலாற்றையும் இதுபோல் தொகுத்து எழுதி குரலில் வெளியிடுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**- திருமதி ஆனந்த செல்வம், நங்கநல்லூர், சென்னை.**

## ஸ்ரீ மங்கைபாகர் தேனம்மை திருமண தகவல் மையம், கோவை

இலவச சேவை-கட்டணம் இல்லை. பதிவிடுங்கள்

சமூகப் பெருமக்களே! பெற்றோர்களே!

மணமகன்-மணமகள் தேவைக்கு உரிய விவரத்துடன் தபால் அனுப்புங்கள். வரிசைப்படி நம்பர் பதிவு செய்து பதிவேட்டில் விபரம் எழுதி விரைவில் திருமணம் கைகூட வழி காண்பிக்கிறோம். 18-07-2006-இல் தொடங்கிய இச்சேவையில் பதிவானது 495. இணைந்த தம்பதிகள் 374. காத்து இருப்பது ஆண் - 102, பெண் - 19, ஆக 121. பெண் பதிவு மிக மிக குறைவு. பெண்வீட்டார்கள் முன் வந்து பதிவு கொடுத்தால் சமூக இனம் பெருக சமூகம் வளரும். பெண் வீட்டார்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுகிறோம்.

சாமியாடி எஸ். ஜெகனாதன்
நெ. 10 இ, அம்மன் கோவில் தோட்டம்,
பஸ்நிலையம், வடவள்ளி,
கோயமுத்தூர் - 641 041.
செல் : 98948 37649

பி.எல்.ஆர். திருமுருகன் ஸ்டோர்ஸ்
நெ. 18, எம்.கே.ஜி. லே அவுட்
ITI பின்புறம் GN மில்
கோயமுத்தூர் - 641 029.
செல் : 99523 49855

குறிப்பு : நேரில் வந்து கலந்து பேசினால் உடன் திருமணம் கைகூட வாய்ப்பு அதிகம்.



உ
சிவமயம்

யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போது ஒருகைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே.

- திருமூலர்

# அரசு மெடிக்கல்ஸ்

**வெள்ளி விழா கண்ட நிறுவனம்**

**எல்லாவிதமான இங்கிலீஷ் மருந்துகளும் கிடைக்கும்**





**பஸ் ஸ்டாண்டு அருகில், பொன்னமராவதி. போன் : 260657**

# மத்திய - மாநில அரசு ஆட்சிப் பணிகள்

**வ**ருங்காலங்களில் அரசு ஆட்சிப்பணியில் சிறப்பாக பணிபுரிய இருக்கும் இன்றைய மாணவச் செல்வங்களே! நம்மில் பலருக்கும் தெரிந்த உயர் பதவிகள் IAS, IPS பதவி என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறோம். இதுபோல் இன்னும் 26 வகையான ஆட்சிப் பணிகளை கீழே குறிப்பிட்டுள்ளேன்.

இந்த உயர் பதவிகளையெல்லாம் இதுவரை வடநாட்டுக் காரர்களும், கேரள மக்களுமே ஆக்ரமித்துள்ளார்கள். தமிழக மாணவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் விஏஓ பதவி, கிளார்க் பதவி, சத்துணவு அமைப்பாளர் போன்றவைகளே. இத்துணை வாய்ப்புக்கள் இன்றைய இளம் பட்டதாரிகளுக்குத் தெரியவில்லை. தமிழக அரசும் இது பற்றிய போதிய விழிப்புணர்வு மாணவர்களுக்கு வழங்கவில்லை.

1. IAS - Indian Administrative Service
2. IPS - Indian Police Service
3. IFS - Indian Foreign Service
4. IFS - Indian Forest Service
5. IRS - Indian Revenue Service (Income Tax)
6. IRS - Indian Revenue Service (Customs & Central Excise)
7. IAAS - Indian Audit and Accounts Service
8. ICAS - Indian Civl Accounts Service
9. ICLS - Indian Corporate Law Service
10. IDAS - Indian Defence Accounts Service
11. IDES - Indian Defence Estate Service
12. IIS - Indian Information Service
13. IPTAS - Indian Post & Telecom Accounts Service
14. IPS - Indian Postal Service
15. IRAS - Indian Railway Accounts Service
16. IRPS - Indian Railway Personal Service
17. IRTS - Indian Railway Traffics Service
18. ITS - Indian Trade Service
19. IRPFS - Indian Railway Protection Force Service

21. IIOFS\ - Indian Ordinance Factory Service
22. IDSE - Indian Defence Engineering Services
23. IES - Indian Economics Services
24. ISS - Indian Statistics Service
25. IRES - Indian Railway engg Services
26. IREES - Indian railway elec engg Service

இத்தனைப் பதவிகளும் தேர்வுகளும் இந்திய ஆட்சி, அதிகார, ஆளுமை பணிகளுக்கானப் பணி இடங்கள். **இவை அனைத்திற்கும் தேவையான கல்வித் தகுதி ஏதாவது ஒரு பட்டப் படிப்பு மட்டுமே.**

ஒரு பட்டப்படிப்பும், முறையான பயிற்சியும் இருந்தால் யார் வேண்டுமானாலும் இந்தத் தேர்வுகளில் வெற்றி பெற்று இந்திய ஆட்சிப்பணி பதவிகளில் அமரலாம்.

**இன்றைய நமது மாணவச் செல்வங்களே முயற்சி செய்யுங்கள்.**

**– சுப. செல்வம், குரல் ஆசிரியர்.**



## வீட்டு வேலைக்கு ஆட்கள் தேவை

சமையல் மட்டும் வீடு பராமரிப்பு வேலைகளை
**சேலத்தில் வீட்டிலேயே தங்கி செய்வதற்கு**
**நம் இனத்தவர்களில் ஆண் அல்லது பெண் தேவை.**
நல்ல சம்பளம் தரப்படும்.

மேலும் தொடர்புக்கு : **94433 63661**


**ஆன்மீகச் செய்தி:**

உன்னைப் புரிந்து கொண்டவர்கள் உன்னை விட்டு பிரிவதில்லை.
உன்னைப் புரிந்து கொள்ளாதவர்கள் உன்னிடம் இருப்பதில்லை.

**– பகவத் கீதை**

**சிறுகதை :**

## உழைத்து சம்பாதி - பிறருக்கு உதவு

ஒரு ஊரில் ஓர் விறகு வெட்டி இருந்தான். ஒருநாள் அவன் காட்டிற்கு விறகு வெட்டச் சென்றபோது, “புலி ஒன்று மானை வேட்டையாடி பசியாற சாப்பிட்டது போக மீதியை விட்டுச் சென்றது. இரு கால்கள் இல்லாத நரி நகர்ந்து சென்று மீதம் இருந்த மான் மாமிசத்தை தின்றது. ”இதைக் கவனித்த விறகு வெட்டி, “கால்கள் இல்லாத நரிக்கே சாப்பாடு கிடைக்கும் போது நாம் ஏன் விறகு வெட்டி கஷ்டப்பட வேண்டும்” என்று நினைத்துக் கொண்டு கோயில்கள், சாவடிகளில் கடவுளிடம் உணவுக்காக வேண்டினான். உணவு கிடைக்கவில்லை. உணவின்றி வாடியதால் உடல் மெலிந்து, கடவுளை நொந்து கொண்டு படுத்து இருந்தான். கடவுள் ஒரு நாள் விறகு வெட்டியின் கனவில் தோன்றி, “மடையா நீ கற்க வேண்டியது நரி இடம் இல்லை, புலி” என்று கூறி மறைந்தார்.


பின்னர் விறகு வெட்டி பணம் சம்பாதித்து தனக்குப் போக மீதியைப் பிறருக்கு உதவி வாழ ஆரம்பித்தான். உழைக்காமல் கடவுள் எதுவும் தரமாட்டார் என்பதை உணர்ந்து வாழ்ந்தான். **– திரு S. சுரேஷ், காட்டிப்பட்டி, திண்டுக்கல்.**

உ

ஸ்ரீ வயிரவ சுவாமி துணை

**வாழ்த்துக்களுடன்**

கடை : **94432 06431** வீடு : **97874 81103**



# சிவசக்தி ஸ்டோர்

**97,** அண்ணாசாலை,

பொன்னமராவதி

மளிகை, ஆயில், ஸ்டேஷனரி மற்றும்

குளிர்பானங்கள்

மொத்தம் & சில்லறை

# அன்னம் டிரேடர்ஸ்

70B, மெயின் ரோடு,

பொன்னமராவதி

**ஸ்டாக்கிஸ்ட் :** நெஸ்டில், AVT Tea,

கணேஷ் பீடி, ஊர்வசி சோப்,

ராஜம் சுக்கு காபி





# சிவம் ஏஜென்சீஸ்

6A, ஆஸ்பத்திரி ரோடு,

பொன்னமராவதி

**ஸ்டாக்கிஸ்ட் :** அமுல் (இந்தியா),

கோத்ரெஜ், டாபர் பேஸ்ட்

நகரத்தார் குரல் சிறக்க வாழ்த்துக்கள்!

தலைமுறைகள் நீடித்து நிற்கும் கட்டிடங்களின் நம்பிக்கை

ATC

# அன்பு வணிக நிலையம்

அண்ணாசாலை, பொன்னமராவதி - 622 407.

போன்: 04333 262095 செல்: 94421 60385, 94434 13223

Texmo Industries
Est. 1956
டேரோ பம்புகள்

மகத்தான அறுவடையின் ரகசியம்

Taro Pumps

GM
SWITCH TO A BETTER WORLD

NIPPON PAINT

ESSCO BY Jaquar GROUP

UltraTech CEMENT
The Engineer's Choice

Chettinad cement

RAMCO SUPERGRADE
As strong as family bonds.

AMMAN-TRY TMT BARS
500 guarD
கட்டிடங்களின் பாதுகாவலன்

SRI DURGA TMT

TNPL Cement
Give your building life long protection!

TATA TISCON SD
SUPER DUCTILE REBARS

Birla White
THE WHITEST WHITE CEMENT

FinOlex INDUSTRIES

ஏழாம் ஆண்டு

# நினைவு அஞ்சலி



தெய்வத்திரு

**A.P. சரவண ஐயப்பன்**

நினைவுகளுடன்

**குடும்பத்தார்கள்**


1936

ஆதிகாலத்து அலங்கார மாளிகை

பொன்னமராவதி | புதுக்கோட்டை

ஆனந்த் பைப்ஸ்

ஈரோடு • மதுரை • திருச்சி

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்:
**26-10-1963**

மறைவு:
**20-11-2020**

## தெய்வத்திரு R. செந்தாமரை ஆச்சி

பூர்வீகம்: கட்டுக்குடிபட்டி இருப்பு: கல்வீரம்பாளையம்

**விழியில் இருந்து இதயம் நுழைந்து**
**உயிரில் கலந்த உறவே**
**இரவு நிலவில் முகம் பார்த்து**
**இயற்கை காற்றை சுவாசித்து**
**சேரனில் தாலாட்டில் உறங்கச் சென்ற நீ**
**காலை உதயசூரியனை பார்க்க மறந்தது ஏனோ?**

என்றும் நினைவுகளுடன்...

கணவர் **க. இரவிசந்திரன்**

**G. பாக்யலெட்சுமி, K. கோபிநாத்**

பேரன் **G. ஹரிஹரன், M. ரோஜா மாதவன்**

**M. நாகராஜ்** B.Sc. I.T., கல்வீரம்பாளையம்

நீங்கா நினைவுகளுடன்...

**சிவ. கமலம் ஆட்சி,** கட்டுக்குடிபட்டி

**சிவ. மயிலேசன்-சாந்தி** குடும்பத்தினர்

**ம. தாமரைச்செல்வன்** C.Tech., – **ஜெய்சூர்யா .MS**

ஒண்டிபுதூர், கோவை–16

உ

# 2 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



## தெய்வத்திரு A. விஜயலட்சுமி ஆச்சி
## பொன்னமராவதி

நினைவு நாள்: 30-01-2019

**எங்களைப் பிரிந்து சிவபாதம் சேர்ந்த உங்களுக்கு**
**கண்ணீர் மலர்தூவி அஞ்சலி செலுத்துகிறோம்**
**என்றும் உங்கள் நினைவில் வாழும்**

சிறுகுடி ஸ்ரீ பாப்பாத்தி அம்மன் சாமியாடி குடும்பத்தார்கள்
மற்றும்


**இயற்கை ஏஜென்சி**
மிட்டாய், முருக்கு, காரவகைகள் வியாபாரம்

கணவர்: திரு G. அன்புச் செல்வன்
மகன்: திரு A. குபேந்திரன்
அலைபேசி எண்கள்:
**99423 07869, 86675 09383**

# சிவபாதம் சேர்ந்தார்

நாலு கரணங்களும் ஒன்றாய், நல்ல அறிவு மேற்கொண்டு,
காலும் பிரம்மநாடி வழிக் கருத்துச் செலுத்தி, கபாலநடு
ஏலவே முன்பயின்ற நெறி, எடுத்த மறை மூலம் திறப்ப
மூலமுதல்வர் திருப்பாதம் அணைவார், கயிலை முன் அடைந்தார்

**- திருமுறை**



சென்னை, புரசைவாக்கம் தரணி புட்வேர் நிறுவனரும் திரு R. ஜெயக்குமார், R. பிரபு, R. அர்ஜுனன் ஆகியவர்களின் தந்தையுமான **திரு A.M. ராஜா செட்டியார்** (வயது 68) 30.10.2020 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்கள். **தகவல் : வாட்ஸ்அப் செய்தி**


---



பொன்னமராவதி சிவந்தி விநாயகர் ஜவுளி ஸ்டோர் உரிமையாளர் திரு மஹாலிங்கம் செட்டியார் அவர்களின் மனைவி **திருமதி ஜோதிமணி ஆச்சி** 29-10-2020 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல் : திரு K.S. பிரகாஷ், கோவை**

---



பொன்னமராவதி S.S. ஆயில் ஸ்டோர் உரிமையாளரும், திருவாளர்கள் சரவணன், முருகேசன், சுரேஷ் ஆகியோரது தகப்பனாரும் TMR சண்முகம் செட்டியார் அவர்களின் சகோதரரும் ஐயப்பா ஜுவல்லர்ஸ் திரு ராமசாமி செட்டியார் அவர்களின் சித்தப்பாவும் ஆகிய **திரு சுப்பிரமணியன் செட்டியார்** அவர்கள் 20-10-2020 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல் : திரு செந்தில்குரு, பொன்னமராவதி**

---

மணப்பாறை **திரு K. சிவலிங்கம் செட்டியார்** அவர்கள் 24-10-2020 அன்று காலை 8.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல்: திரு மா. குப்புசாமி செட்டியார், மணப்பாறை**

கோவை வடவள்ளி திரு ஜவஹர்லால் செட்டியார் அவர்களின் தங்கையும், தெய்வத்திரு முருகேசன் செட்டியார் அவர்களின் மனைவி **திருமதி பானுமதி ஆச்சி** (வயது 56) 31-10-2020 அன்று புழுதிபட்டியில் இறைவனடி சேர்ந்தார்கள்.

**வாட்ஸ்அப் தகவல்: திரு M. சேது, கோவை**

---



பொன்னமராவதி சிவசக்தி ஸ்டோர் திரு சித. நடராஜன் செட்டியார் அவர்களின் மூத்த மகனும் மதுரை அ.வ.ந. சங்கத்தின் செயலாளருமான **திரு NTR. இராமமூர்த்தி செட்டியார்** அவர்கள் 31-10-2020 அன்று மதுரையில் இறைவனடி சேர்ந்தார்கள். **தகவல்: வாட்ஸ் அப் செய்தி**

---

ஆலவயல் ராமன் செட்டியார் மகன் **திரு சுக்ரீ என்ற வேலு** அவர்கள் 26-10-2020 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்கள். **தகவல் : திரு பழ. சொக்கலிங்கன், ஆலவயல்**


---



பூர்வீகம் - சிறுகுடி, தற்போது கோவை கணபதியில் வசித்து வந்த **திரு SK. விநாயக சுந்தரம் செட்டியார்** அவர்கள் 03-11-2020 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல் : S. ராஜா, அன்னூர்.**

---



சிறுகுடி **திரு T. ஜெயகுமார்** (வயது 76) 5-11-2020 அன்று கோவை சிவானந்தா காலனியில் இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல் : திருவாசகம் - கவிதா, கோவைபுதூர்.**

---

பூர்வீகம் வார்பட்டு, கோவை பாப்பநாயக்கன்பாளையத்தில் வசித்து வந்த **திரு SP. ரவீந்திரன் செட்டியார்** அவர்கள் (வயது 59) 5-11-2020 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல் : வாட்ஸ்அப் செய்தி**

---



திண்டுக்கல் அ.வ.ந. சங்கப் பொருளாளர் **திரு கு.ந. நல்லமுத்தன் செட்டியார்** அவர்கள் 16-11-2020 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல் : அ.வ.ந. சங்கம், திண்டுக்கல்.**

---



கோவை கல்வீரம்பாளையம், திரு ரவிச்சந்திரன் செட்டியார் அவர்களின் துணைவியார் **திருமதி செந்தாமரை ஆச்சி** (வயது 54) 20-11-2020 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல் : திரு A.S. முருகேசன், சென்னை.**


---

கோவை P.N. புதூர் சித. ஏகாம்பரம் செட்டியார் அவர்களின் தம்பி கல்லம்பட்டி **திரு சித. ராமனாதன் செட்டியார்** (வயது 61) அவர்கள் 21-11-2020 சனிக்கிழமை அன்று திருச்சியில் இறைவனடி சேர்ந்தார்கள். **தகவல் : வாட்ஸ் அப் செய்தி**

---

ஆலவயல் தெய்வத்திரு சேது செட்டியார் அவர்களின் மனைவியும் திரு S. கார்த்திகேயன் (அழகி மெடிக்கல்ஸ்-சிங்காநல்லூர்) திரு S. ஜெயபால் (ஸ்ரீ அழகி மெடிக்கல்ஸ்-நீலிக்கோணாம்பாளையம்) இவர்களின் தாயார் **திருமதி தவமணி ஆச்சி** அவர்கள் 26-11-2020 அன்று இறைவனடி சேர்ந்தார்கள். தகவல் : **வாட்ஸ் அப் செய்தி**

---



படமிஞ்சி, திரு சுப. முருகானந்தம், திரு சுப. சரவணன், திரு சுப. செந்தில் குமார் இவர்களின் தந்தையும் கல்வி வளர்ச்சிக் கழகப் பொருளாளர் திரு S. சந்திரசேகர் அவர்களின் மாமனாருமான **திரு வை. சுப்பையா செட்டியார்** (வயது 89) 03-12-2020 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்கள். **தகவல் : திரு சே. சந்திரசேகர், சென்னை.**

---

**தங்களது உறவுகளை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**- கல்வி வளர்ச்சிக் கழகம் மற்றும் குரல் நிர்வாகம்**

# நவம்பர் 2020 மாத குறுக்கெழுத்துப் போட்டியில் குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

| | வ. எண் | பெயர் |
|---|---|---|
| 1. | 35 | ந. தமிழ்செல்வி, கோவை |
| 2. | 2 | வி. காயத்ரி, கோவை |
| 3. | 6 | பா. கவிதா, சென்னை |
| 4. | 32 | ம. சாவித்திரி மலரவன், கோவை |
| 5. | 20 | பொ. சிவனேசன், திண்டுக்கல் |
| 6. | 16 | R. சங்கீதா, திண்டுக்கல் |
| 7. | 10 | ச. செண்பகமலர், நத்தம் |
| 8. | 1 | இ. ரமணன், தஞ்சாவூர் |
| 9. | 4 | K. அபிராமி, கோவை |
| 10. | 5 | S. ரோஷிணி, சிங்கம்புணரி |

நவம்பர் 2020 மாத வெற்றியாளர்களுக்கு பரிசு வழங்கியவர்கள் **தங்கராஜ் - புஷ்பவள்ளி டிரஸ்ட், சேலம்.**


வெற்றி பெற்றவர்களுக்கும், போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கும் வாழ்த்துக்கள்!! **- குரல் ஆசிரியர்**

## குறுக்கெழுத்துப் புதிர் போட்டி நிபந்தனைகள்


1. இந்தப் போட்டியில் அனைவரும் கலந்து கொள்ளலாம்.
2. இந்தப் போட்டிக்கான பதிலை குரல் புத்தகத்தில் வெளியிட்டுள்ள போட்டிக்கான கட்டங்களை நிரப்பி அதை போட்டோ எடுத்து வாட்ஸ் அப் மூலம் 94444 68900 என்ற எண்ணிற்கு மட்டும் அனுப்ப வேண்டுகிறோம்.
3. விடைத்தாளில் **பெயர், ஊர், குடிப்பட்டம், அலைபேசி எண்.** முதலியவற்றை தவறாமல் குறிப்பிடவும்.
4. விடைகள் 31.01.2021-க்குள் வந்து சேர வேண்டும்.
5. சரியான விடைகள் குலுக்கல் முறையில் 10 நபர்களுக்கு தலா ரூ.100/-பரிசாக வழங்கப்படும்.
6. இந்தப் போட்டிக்கான பரிசுகளை இந்த மாதம் (ஜனவரி 2021) வழங்குபவர்கள் **தங்கராஜ் - புஷ்பவள்ளி டிரஸ்ட், சேலம்**
7. வருடம் முழுவதும் வெளிவரும் குறுக்கெழுத்துப் போட்டிகளில் தொடர்ந்து கலந்து கொண்டு பரிசுகள் பெறாதவர்களுக்கு ஆண்டு முடிவில் அவர்களுக்கென தனியாக சிறப்பு குலுக்கல் நடைபெற்று பரிசுகள் வழங்கப்படும்.

# குறுக்கெழுத்துப் போட்டி - 5

**ஆக்கம் : திரு. ந. ஜெகநாதர், திண்டுக்கல்**



விடைகள் இந்த ஜனவரி 2021 மாத அ.வ.ந. குரல் புத்தகத்துள்ளேயே உள்ளன.




## இடமிருந்து வலம்

1. அறுபத்து மூவரையும் பிழையின்றி குறிக்கும் சொல் .... (5 எழுத்து)
4. ----- என்ற மமகாரம் அற்றவர்கள் அடியார்கள்.... (3 எழுத்து)
11. ----- எண்ணெயில் உப்பைக் கலந்து பல் துலக்கினால் பல் உறுதி பெறும் (3 எழுத்து)

## வலமிருந்து இடம்

3. பட்டினத்தடிகளின் கணக்கர்.... (5 எழுத்து)
8. சிவநாமத்தை உச்சரிக்காதவன்.... (2 எழுத்து)
10. வாழை இலை போடாமல்.... சிறக்காது (4 எழுத்து) எழுத்துக்கள் குழம்பியுள்ளன)
13. ஞானம் அடைந்தால் மாயையின்.... புலப்படும் (3 எழுத்து)

## மேலிருந்து கீழ்

3. வீடுபேறு அருளும் இறைவனைக் குறிக்கும் சொல்.... (5 எழுத்து)
7. சூரியனின் தேரோட்டி.... (4 எழுத்து)
9. மார்கழி இது ------ மாதம் (2 எழுத்து)
10. காசிப முனிவரின் மனைவி.... (3 எழுத்து)
11. திருவாதிரை நாளன்று இறைவனுக்குப் படைப்பது.... (2 எழுத்து)
12. 144 சதுரடி கொண்ட இடத்தை பாரம்பரிய அளவீட்டு முறையில் ------ என்று கூறுவர். (2 எழுத்து)

## கீழிருந்து மேல்

5. திருமீயச்சூர் கோயில் ----- யுகத்திலிருந்தேயுள்ளது. (3 எழுத்து)
7. பற்று அற்றவர்.... (4 எழுத்து)

## மேலிருந்து கீழ் (2) & கீழிருந்து மேல் (6) (பொதுவானது)

பிறவி என்பதே------ (4 எழுத்து), எழுத்துக்கள் குழம்பியுள்ளன)

# வாழ்க்கை ஒரு அற்புதப் பரிசு



எப்படியும் வாழலாம் என்ற மனப்போக்கை மாற்றி இப்படித்தான் வாழ வேண்டும் என்ற முடிவை இன்றே எடுங்கள். இதை நான் ஏன் சொல்லுகிறேன் என்றால் இன்று எங்கு பார்க்கினும் இளம் வயது மரணங்கள் பெருகி வருகின்றன. அவர்களின் மரணங்கள் உறவுகளற்ற அந்நியர்களையும் உலுக்கிப் போடுகிறது. அவர்களை நம்பி வந்த குடும்பங்கள் நிர்க்கதி ஆக்கி விடுகின்றது. குடும்பத் தலைவனின் இறப்புக்குப் பிறகு அந்தக் குடும்பமானது பெரும்பாலும் உறவுகளால் கைவிடப்படுகின்றன.

இது விதியேயல்ல. இன்றைய மனிதனின் அலட்சிய போக்கும், அவன் வாழ்வியல் தவறுகளும் தான் இதற்கு முழுக்க முழுக்க காரணம். மனிதனின் ஆயுட்காலம் இப்படி குறுகிக் கொண்டே போவதற்கான காரணங்களில் சில....

1. உடற்பயிற்சி இன்மை / உடல் உழைப்பின்மை.
2. இரவில் கண் விழித்திருத்தல்.
3. காலை உணவை தவிர்த்தல்.
4. ஆரோக்கியமற்ற உணவுகளின் மீதுள்ள நாட்டம்.
5. பணத்தை நோக்கிய ஓட்டம்.
6. பழைய உணவுகளை சூடாக்கி, சூடாக்கி உண்ணல்.
7. கவலைகளை கட்டிக் கொண்டு இருத்தல்.

வாழ்வில் உணவை முதன்மைப்படுத்துங்கள். காலை உணவை தவிர்க்காமல், ஆரோக்கியமானதைத் தேர்வு செய்து உண்ணுங்கள். இரவில் அளவாக உண்ணுங்கள். உணவை தரமாக்குங்கள். **கண்டதையும் கொட்ட நம் உடல் குப்பைத் தொட்டி அல்ல.** உணவை வெறும் ஒப்பேத்தலாக மாற்றாதீர்கள்.

நேரத்திற்கு உறங்குங்கள். இரவு உறக்கத்தின் பொழுது தான் நம் உடல் தன்னைத் தானே சீராக்குகிறது.

பச்சையாக உண்ணக் கூடிய தேங்காய், ஊற வைத்த நிலக்கடலை, வெள்ளரி பிஞ்சு, கேரட், சின்ன வெங்காயம், பேரீச்சம் பழம், முந்திரி போன்றவற்றில் முடிந்ததை தினமும் உண்ணுங்கள்.


ஓரிடத்தில் தொடர்ந்து உட்காருவதை குறையுங்கள். உங்கள் நேரத்தை இயந்திரத்தோடு குறுக்கிக் கொள்ளாதீர்கள். உடல் வளர்ச்சிக்கு உணவைப் போல் உடற்பயிற்சியும் அத்தியாவசியமான ஒன்று. எப்போதும் சுறுசுறுப்பாக இருங்கள்.

மூன்று வேளை உண்பதால் இரண்டு வேளை அவசியம் 20 நிமிடங்கள் நடைப்பயிற்சி செய்யுங்கள். எப்பொழுதும் இறுக்கமாக இருக்காது சிரித்துப் பேசி சந்தோசமாக இருங்கள். அழுது வடியும் சீரியல்களைப் பார்த்து உங்கள் இதயத்தை வாட்டாமல் சிரிக்க வைக்கும் காட்சிகளைக் கண்டு களியுங்கள்.

ஆளைக் கொல்லும் கவலைகளைப் புறந்தள்ளி, ஆளுமையைத் தரும் தன்னம்பிக்கையை ஆடையாகப் பூணுங்கள்.

**வாழ்க்கை ஒரு அற்புதப் பரிசு.** அதை நன்றாக வாழ்ந்து காட்டி மற்றவர்களுக்கு முன் உதாரணமாகத் திகழ்ந்து இளம் வயது மரணங்களைத் தவிர்ப்போம்.

**- சுப. நேசமணியன், நங்கநல்லூர், சென்னை-61**



# புதுமனை புகுவிழா

பூர்வீகம் - புழுதிபட்டி, இருப்பு - கோவை, M.S.S. சொக்கலிங்கம் செட்டியார், சொ. முத்துசெழியன் செட்டியார் - திருமதி ரம்யா ஆச்சி குடும்பத்தார்கள் 26-10-2020 - ஆம் நாள் கோவை, மருதமலை ரோடு, கல்வீரம்பாளையத்தில் புதியதாகக்கட்டியுள்ள **"ஆனந்தசுவாதி"** இல்ல புதுமனை புகுவிழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் பந்துக்களும், மாமன்-மைத்துனர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**தகவல் : திரு M.S.S. சொக்கலிங்கம் செட்டியார், கோவை.**

# வீட்டில் விளக்கேற்ற உகந்த நேரம்



பொதுவாகவே பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து ஸ்நானம் செய்துவிட்டு வீட்டில் விளக்கேற்றுவது மிகவும் அதிர்ஷ்டமான பலன்களைக் கொடுக்கும் என்பது சாஸ்திரம்.

எல்லோராலும் பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து விளக்கு ஏற்றுவது என்பது கடினமான காரியம். ஆனால் இதை செய்பவர்களுக்கு நிச்சயம் நல்ல பலன்கள் கிடைக்கும் என்பது உறுதி. பிரம்ம முகூர்த்தம் என்பது அதிகாலை மூன்றிலிருந்து நான்கரை மணியைக் குறிக்கிறது. இந்த நேரத்தில் விளக்கு ஏற்றுபவர்களுக்கு தேவர்களின் ஆசீர்வாதமும், தெய்வங்களின் அருளும் கிடைக்கும் என்பது ஐதீகம்.

சுத்தமான காற்றும் முழு அமைதியும் நிரம்பி இருக்கும் இந்த பிரபஞ்சத்தின் ஒட்டு மொத்த சக்தியும் அந்த நேரத்தில் நமக்கு கிடைக்கின்றன. அந்த நேரத்தில் சாதாரணமாக எழுந்து விட்டு நமஸ்காரம் செய்து கொண்டாலே யோகம் உண்டாகும். தியானம், யோகா போன்றவை அந்த நேரத்தில் 10 நிமிடம் செய்தாலே அன்றைய நாள் முழுவதும் நல்ல ஆற்றல்களும், உற்சாகமும் கொண்டு விளங்கலாம்.

நம் அனைவராலும் பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து கொள்ள முடியாது. அதற்குப் பதிலாக வேறு என்ன செய்யலாம் என்பதைத் தெரிந்து கொள்வோம். பிரம்ம முகூர்த்த நேரத்திற்கு இணையாக இருப்பது சூரியன் மறையும் நேரமாக இருக்கும் சந்தியா காலம் ஆகும். கிட்டத்தட்ட சந்தியா காலமும், பிரம்ம முகூர்த்தத்திற்கு இணையானது தான். **சந்தியா காலம் என்பது மாலை வேளையில் மூன்றில் இருந்து ஆறு மணி வரை கொண்ட காலம் ஆகும்.** இதில் இறுதியாக இருக்கும் ஒரு மணி நேரம் மிகவும் விசேஷமானது. மாலையில் தினமும் 5 லிருந்து 6 மணிக்குள்ளாக விளக்கேற்றுவது சாஸ்திர நியதி. வெள்ளிக்கிழமைகளில் 6 மணிக்கு மேல் தான் சிலர் விளக்கு ஏற்றுவார்கள். இப்படி செய்வதை விட 6 மணிக்குள்ளாகவே நாம் விளக்கு ஏற்றி விடுவது மிக மிக நல்லது. ஐந்திலிருந்து ஆறு மணிக்குள் தினமும் பூஜை அறையில் 3 விளக்குகளை வைத்து வழிபடுவது ராஜ யோகத்தைக் கொடுக்கும்.

**சந்தியா கால நேரத்தில் வீட்டில் விளக்கு எரிந்து கொண்டிருந்தால் அத்தனைத் தெய்வங்களின் ஆசீர்வாதமும் உங்களுக்குக் கிடைக்கும்** என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். தினமும் மாலை வேளையில் ஐந்திலிருந்து இறை வழிபாடுகளில் ஈடுபட்டு வந்தால் உங்களுக்கு இருக்கும் அத்தனை கஷ்டங்களும் நீங்கி நல்ல விஷயங்கள் நடக்கத் தொடங்கும். நீங்கள் செய்யச் செய்ய உங்களுக்கு அவற்றின் மகத்துவத்தை உணரக்கூடிய வாய்ப்புகள் உண்டாகும். இப்படி சந்தியா கால வேளையில் ஏற்றும் விளக்கானது மஞ்சள் திரியைக் கொண்டு ஏற்றுவது மிக மிக நல்ல பலன்களைக் கொடுக்க வல்லது.

ஒவ்வொரு பிரார்த்தனைக்கும் ஒவ்வொரு நிறத்தில் திரியை ஏற்றுவது வழக்கம். அவ்வகையில் மஞ்சள் நிற திரியானது துன்பங்களைப் போக்கக் கூடிய ஆற்றல் கொண்டுள்ளது. சாதாரண திரியில் மஞ்சள் தோய்த்து, காய வைத்து பின்னர் பயன்படுத்தினால் கஷ்டங்கள் நீங்கும் என்பது ஐதீகம்.

பிரம்ம முகூர்த்த நேரத்தில் எழுபவர்கள் 5 விளக்கில் இது போல் மஞ்சள் திரியைக் கொண்டு தீபம் ஏற்றினால் நல்ல பலன்கள் கிடைக்கும். இந்த இரண்டு வேளைகளும் இறை வழிபாட்டிற்குரிய மிக மிக விசேஷமான காலம் ஆகும்.

**– திருமதி. விசாலா இளவரசன், நங்கநல்லூர். சென்னை – 61.**

உ
சிவமயம்
அருவியூர் வடக்குவளவு நகரத்தார் குரல் சிறக்க வாழ்த்துக்கள்!

**உஷா ஜுவல்லர்ஸ் பைனான்ஸ் டெக்ஸ்**

**77-78, மீனாட்சி டவர்ஸ், P.T.ராஜன் ரோடு,**
**பீபீ குளம், மதுரை–2.**

**:7373073738**

## நகரத்தார்களுக்கு
## கொரானா பேரிடர் நிதி உதவி வழங்கிய
## சென்னை சங்கத்தைப் பாராட்டி ஓர் கவிதை

பார்புகழும் பல்லவன் பூமி சென்னையிலே
பறம்பு மலை வாசிகள் வாழ
கொடை உள்ளம் கொண்ட
கொடுங்குன்றநாதர் அருள் பெற்ற
கொரானா நிதியாக உதவிய
கொடை வள்ளல் ஏராளம்
சித்தர்கள் ஆசி பெற்று சிறப்புடன் வாழ
சிவதொண்டு பல செய்து
வணிக குடிகள் வளர்க! வளர்க! வாழ்க!!

**– திரு R. சத்திய புத்திரன், சித்த வைத்தியர், சிறுகுடி**


உ
சிவமயம்

உடல் நலம் பேணுவோம்! உளம் மகிழ வாழ்வோம் !!

**கார்த்திக் மெடிக்கல்ஸ்**

காந்திபார்க், கோவை


**காமாட்சி பார்மஸி**


சுக்ரவார்பேட்டை, கோவை
செல் : 95144 52521


எல்லாவிதமான இங்கிலீஸ் மருந்துகளும் கிடைக்கும்

S. கிருஷ்ணசாமி
K. பானுமதி

K. மீனாட்சி B.E.
K. மோகனசுந்தரி B.E.
K. கார்த்திக் B.Sc.,



உ

சிறுகுடி தெய்வத்திரு எம். சண்முகம் பி.இ.
அவர்களின் நல்லாசியுடனும்,
பொதுமக்களின் பேராதரவுடனும்
7-ஆம் ஆண்டாக வெற்றிநடை போடும்





**எங்களிடம் தங்கள் விசேஷத்திற்குத் தேவையான**



- பனீர்
- பட்டர்
- கோவா
- சீஸ்
- பால், தயிர்
- பேபிகார்ன்
- ஸ்வீட் கார்ன்
- ரெடிமேட் பூரி
- ரெடிமேட் புரோட்டா
- ரெடிமேட் சப்பாத்தி
- தண்ணீர் பாட்டில்
- ஐஸ்கிரீம்
- காளான் ஊறுகாய்
- ஸ்ரீதேவி பிரியாணி பேஸ்ட்
- Frozen Items

**ஆர்டரின் பேரில் ஏற்பாடு செய்து தரப்படும்.**

S. **பழனியப்பன்** B.E., ✆ 90257 87637, 70107 91246



## அர்ச்சனா ஜெனரல்ஸ்
## காளான்
### நேரடி விற்பனை நிலையம்
**(மொத்தம் & சில்லரை விற்பனை)**

தலைமை தபால் நிலையம் எதிரில், ST கொரியர் அருகில்,
ஸ்கீம் ரோடு, திண்டுக்கல் - 624 001.

E-mail : archanaageneralsdgl@yahoo.in

# தெரியாமலா சொன்னார்கள்... முன்னோர்கள்

**1. தாழ்ப்பாளை சும்மா போட்டு லொட்டு லொட்டுனு ஆட்டக்கூடாது. அப்படிச் செய்தா வீட்டில சண்டை வரும்...**

அதாவது தாழ்ப்பாளை அடிக்கடி ஆட்டினால் கதவுடன் இணைக்கப்பட்டிருக்கும் தாழ்ப்பாள், லொட லொடக்க (ஸ்குரு, சக்கை கழன்று) ஆரம்பித்து விடும். திருடர்கள் வீட்டுக்குள் சுலபமாக உள்ளே நுழைவதற்கு நாமே வழி ஏற்படுத்தியது போலாகிவிடும்.

**2. வீட்டுக்குள்ள நகம் வெட்டினா...வீடு விளங்காது...**

வெட்டித் துண்டாகும் நகம் எங்கேயாவது தெறித்து விழ நேரிடும். சில சமயங்களில் உணவுப் பொருளில்கூட கலக்க வாய்ப்புண்டு. காலில்கூட அது ஏறி... வில்லங்கத்துக்கு வழி வகுக்கும். குழந்தைகள் இருந்தால் அதை எடுத்து விழுங்கிவிடும் ஆபத்தும் உள்ளது.

**3. நகத்தைக் கடித்தால் தரித்திரம்...**

நக இடுக்குகளில் உள்ள அழுக்கு, வாய் வழியாக உடலுக்குள் சென்று பல்வேறுவிதமான நோய்களுக்கு வழி ஏற்படுத்திவிடும்.

**4. உச்சி வேளையில் கிணத்தை எட்டிப் பார்க்கக் கூடாது...**

கிணற்றுக்குள் பல்வேறு விஷவாயுக்கள் உற்பத்தியாகும். உச்சிவெயிலின்போது நேரடியாக சூரிய ஒளி கிணற்றுக்குள் விழுவதால், அந்த வாயுக்கள் வெப்பத்தால் லேசாகி மேலே பரவும்; எட்டிப் பார்ப்பவர்களை அது தாக்கினால் ஆபத்து.

**5. இருட்டிய பிறகு குப்பையை வெளியே கொட்டினால் லட்சுமி வெளியே போய்விடுவாள்...**

வீட்டுக்குள் பகல் முழுக்க நடமாடும் நாம், ஏதாவது சின்னஞ்சிறு நகை போன்ற பொருட்களை தவறவிட்டிருந்தால், அது குப்பையில் சேர்ந்திருக்கும். இரவு நேரத்தில் அள்ளித் தெருவில் கொட்டிவிட்டால், பிறகு தேடிக் கண்டுபிடிப்பது சிரமத்திலும் சிரமம்.

**6. வீட்டில் புறா வளர்க்கக் கூடாது. வளர்த்தால் குடும்பம் அழிந்துவிடும்...**

புறாக்கழிவுகளின் வாசனை பாம்பை ஈர்க்க வல்லது. அதனால் அதைத் தேடி விஷப்பாம்புகள் வரும்.

**7. இரவு நேரங்களில் கீரை சாப்பிட்டால்... எமனுக்கு அழைப்பு வைப்பது போல....**

கீரை எளிதில் ஜீரணமாகாது. அதிலும் இரவில் சாப்பிட்டுப் படுத்தால் தேவையற்ற உடல் தொந்தரவுக்கு வழி வகுத்து விடும். எனவே, பகல் வேளைகளில் மட்டுமே அதைச் சாப்பிட வேண்டும்.

**8. முருங்கை மரம் வாசலில் வைத்தால் வீட்டுக்கு ஆகாது.**

மரங்களிலேயே மிகவும் மென்மையான மரம் என்பதால் குழந்தைகள் ஏறினால்கூட பட்டென்று கிளைகள் முறிந்து, விபத்துக்கு வழி வகுத்து விடும். தவிர, அதில் வரும் கம்பளிப்பூச்சி உள்ளிட்டவை எளிதாக வீடு தேடி வந்து தாக்குதல் நடத்தும்.

**9. தலைவிரி கோலமாக பெண்கள் இருக்கக் கூடாது.**

சமைக்கும் போதும்... பரிமாறும் போதும் உணவில் தலைமுடி விழுந்து அருவருப்பு உண்டாக்குவதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காக.

**10. வடக்கே தலை வைத்துப் படுக்கக் கூடாது.**

பூமியின் காந்த சக்தியானது வடதுருவத்தை நோக்கி நிற்கிறது. வட திசையில் தலை வைத்து படுக்கும்போது அதன் ஈர்ப்பு சக்தியானது நம் தலையையும், மூளையையும் தாக்குகிறது. அதனால் ஆரோக்கியம் குறையும் என்ற நம்பிக்கையின் வெளிப்பாடு.

**11. வாழை இலை போடாமல் விருந்து சிறக்காது...**

வாழை இலையில் 'பினாலிக்ஸ்' எனும் இயற்கை சத்து உள்ளது. இதில் தொடர்ந்து சாப்பிட்டு வருபவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும் என்பது அராய்ச்சி முடிவு. இதை அனுபவத்தில் உணர்ந்தவர்கள் நம் முன்னோர்கள்.

– சுப. செல்வம், குரலாசிரியர்

# நில அளவை

நம் எல்லோருடைய பொதுவான எண்ணம் குறைந்த பட்சம் நாம் வசிக்கின்ற பகுதியில் ஓர் இடம் வாங்கி சொந்த வீடு கட்ட வேண்டும் என்பதே. நிலத்தை அளவிடும் அளவீடுகள் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு மாதிரி வழங்கும் பேச்சு வழக்கை கேட்கும் பொழுது சிறிது குழப்பமாக இருக்கும். ஒரு சில இடங்களில் கிரவுண்ட், செண்ட், குழி, சதுர அடி இப்படி பல்வேறு பெயர்களில் விலை பேசுவது இன்றும் வழக்கத்தில் உள்ளது.

நிலத்தை வைத்திருக்கும் உரிமையாளர் ஒரு நிலத்தையோ அல்லது மனையையோ அளக்க முற்படும் பொழுது பெரும்பாலும் அந்த அளவுகளில் பல விஷயங்கள் புரிவதில்லை. குறிப்பாக நில வரைபடம் பற்றி தெளிவாக நமக்குத் தெரிவதில்லை. அது நமக்குப் புரியாத ஒரு புதிராகவே இருக்கிறது. எனவே ஒரு நிலத்தை எப்படி அளக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் FMB எனப்படும் புல வரைபடத்தைப் பற்றி முதலில் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**சர்வே புல வரைபடத்தில் கண்டிப்பாகத் தெரிந்து கொள்ள வேண்டிய 7 முக்கிய செய்திகள் :**

1. ஒரு FMB-யில் நிலத்தின் அளவுகள், உட்பிரிவு எண்கள், விளக்கிகள் அருகில் உள்ள சர்வே எண்கள் ஆகியவை இருக்கும்.
2. ஒரு சர்வே எண்ணின் எல்லை கோடுகளுக்குப் பெயர் "F' லைன் என்று பெயர். (Field Boundry Line)
3. குறுக்கு விட்டமாக வரும் லைனுக்கு "G' லைன் என்று பெயர். அதாவது A - யிலிருந்து D - க்கு இவ்வளவு தூரம் என்று கணக்கிட்டு விடுவார்கள்.
4. மேலும் E யிலிருந்து B-க்கும் விட்டமாக ஒரு லைனும் அதன் அளவும் போட்டு இருப்பர். அதுவும் "G' லைன் ஆகும்.
5. இரண்டு "G' லைனில் ஏதாவது ஒரு கல் காணாமல் போனாலும் மற்ற "G' லைனை வைத்து காணாமல் போன கல் எங்கு இருக்க வேண்டும் என்று கண்டுபிடிப்பர்.

6. மீட்டர் கணக்கில் தான் FMB-யில் அளவுகளை எழுதுவார்கள்.
7. ஒரே சர்வே எண்ணில் 15 ஏக்கருக்கு மேல் இருந்தால் 1 : 5000 என்றும், கொஞ்சம் குறைவாக இருப்பின் 1 : 2000 என்றும் மிக சிறிய நிலமாக இருந்தால் 1 : 1000 என்றும் இருக்கும்.

**நிலத்தை அளக்கும் அளவுமுறைகள் :**

நிலத்தை அளக்கின்ற அளவீடுகள் ஒவ்வொரு பகுதிகளில் ஒவ்வொரு அளவீட்டு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றை நிச்சயமாக புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் 3 அளவீட்டு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

**1. பாரம்பரிய நாட்டு வழக்கு அளவீடுகள் :**

குழி, மா, வேலி, காணி, மரக்கா.

**2. பிரிட்டிஸ் வழக்கு அளவீடுகள் :**

சதுரஅடி, சென்ட், ஏக்கர், போன்றவை.

**3. மெட்ரிக் வழக்கு அளவுகள் :**

சதுர மீட்டர், ஏர்ஸ், ஹெக்டர்ஸ்.

இருப்பினும் எல்லா பட்டா ஆவணங்களும், மெட்ரிக் அளவு முறைகளில் ஏர்ஸ், ஹெக்டேரில் தான் இருக்கின்றன.

**நில அளவீடுகள் :**

| | |
|---|---|
| **1 வேலி** | **= 20 மா = 5 காணி = 6.17 ஏக்கர்** |
| 1 ஹெக்டேர் | = 7 மா = 2 ஏக்கர் 47 சென்ட் = 10000 ச.மீ. |
| 1 ஏக்கர் | = 100 சென்ட் = 4046 ச.மீ. = 0.405 ஹெக்டேர் |
| 1 காணி | = 1.32 ஏக்கர் = 57499 சதுர அடி. |
| 1 மா | = 100 குழி |
| 1 கிரவுண்டு | = 2400 ச.அ. = 5.5 சென்ட் = 222.96 ச.மீ. |
| 1 ஏர்ஸ் | = 2.47 சென்ட் = 100 ச.மீ. = 1076 சதுர அடி |
| 1 சென்ட் | = 3 குழி = 435.6 சதுர அடி = 40.5 ச.மீ. |
| 1 குழி | = 144 சதுர அடி. |
| 1 செயின் | = 66 அடி (100 லிங்க்) = 22 கெஜம் |
| 1 சதுர மீட்டர் | = 10.76 சதுர அடி. |
| 1 மீட்டர் | = 3.28 அடி |

**– சுப. செல்வம், குரல் ஆசிரியர்**



# இதமான வாழ்விற்கு.....

எல்லா வளமும் இருந்தாலும் குடும்பத்தில் எப்பொழுதும் மகிழ்ச்சி நிலைத்திருக்க வேண்டும் என்று அனைவரும் விரும்புவோம். அதற்கு நம்முடைய செயல்பாடுகள் இப்படி இருந்தால் நிச்சயம் அமைதியும், மகிழ்ச்சியும் நிலவும்.

1. கணவனும் மனைவியும் சேர்ந்து குடும்பப் பிரச்சனைகளை விவாதிக்க வேண்டும்.
2. தூங்கப் போகும் பொழுதும், உணவு அருந்தும் பொழுதும் குறைகளைப் பேசக்கூடாது.
3. குடும்பத்தின் சுக துக்கங்களை - இன்ப துன்பங்களைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ளக் கூடாது.
4. தீயவர்களின் நட்பை விட்டொழிக்க வேண்டும்.
5. தாய், தந்தை, குரு இவர்களை தெய்வமாக போற்ற வேண்டும். இவர்கட்கு தீமை செய்தால் விலக்க முடியாத பாவம் நம்மை வந்தடையும்.
6. பிள்ளைகள் எதிரில் தாய் தந்தையர் சண்டை போடவே கூடாது.
7. தாய் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்ததற்கு நாம் எதையும் கொடுக்க முடியாது. எதைச் செய்தாலும் அதற்கு நிகராகுமா?
8. தாய், தந்தை, குரு ஆகியவர்களைத் தெய்வமாகப் போற்றுபவர் கட்கு எல்லா நன்மைகளும் வந்து சேரும். இது கடவுளின் நியதி.
9. பெண்கள் தலையை விரித்துப் போடுவதும், இரவில் அழுவதும் கூடாது.
10. ஆண்கள் மது, புகை போன்றவற்றை கட்டாயம் விலக்க வேண்டும்.
11. வரவிற்கு ஏற்ற செலவும், சிறிது சேமித்தலும் அவசியமாகும்.
12. தேவையற்ற பயம், எதற்கெடுத்தாலும் கோபப்படுதல், சோம்பல், காரியங்களை தள்ளிப் போடுவது ஆகியவை கூடாது.
13. உண்மை, நேர்மை, இனிமை, எளிமை அவசியம் தேவை.
14. புண்ணியங்கள் - நற்செயல்கள் செய்வதை மறக்கவே கூடாது
15. மற்றவர்களின் மனம் புண்படும்படி நடக்கவே கூடாது.
16. மன இறுக்கமும், மன அழுத்தமும் ஏற்படும் பொழுது இறை வழிபாட்டில் ஈடுபட வேண்டும்.

மேலே கூறிய அனைத்தும் குடும்பத்தில் கடைப்பிடித்தால் என்றும் மகிழ்ச்சியாக வாழலாம்.

**- குரல் ஆசிரியர்**


1936
ஆதிகாலத்து
அலங்கார மாளிகை
பொன்னமராவதி | புதுக்கோட்டை
பட்டின் அற்புத படைப்புகள்




**Book Post - Printed Matter**

**To**

**From**

அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்
3, முதல் குறுக்குத் தெரு,
அழகப்பா காம்ப்ளக்ஸ் பின்புறம்,
மெயின்ரோடு ரோடு, **பொன்னமராவதி,**
புதுக்கோட்டை மாவட்டம் - 622 407.

SURYA SVK Cell : 98421 24415